Registered as a News Paper பக்கங்கள் 10 விலை: ரூபா 6-00

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 15 [28-05-93] வெள்ளிக்கிழமை ஓசை 99

## ஒலிபெருக்கி பாவனைக்கு அனுமதி தேவை

யாழ். குடாநாட்டில் பொது ஸ்தாபனங்களோ தனிப்பட்டவர்களோ ஏதேனும் நிகழ்ச்சிக்காக அல்லது உற்சவங்களுக்காக ஒலிபெருக்கி பாவிக்க விரும்பின் அவர்கள் காவல்துறையின் அனுமதியை பெற்றிருக்க வேண்டும் என தமிழீழக் காவல்துறைபொறுப்பாளர் பா. நடேசன் அறிவித்துள்ளார். ஒவ்வொரு காவல் பணிமனை பிரதேசங்களுக்கு உட்பட்டவர்கள் அந்தந்த காவல்பணிமனைகளுக்கு தங்கள் விண்ணப்பங்களை இருவாரங்களுக்கு முன்கூட்டியே சமர்ப்பிக்க வேண்டும் (09 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.க. முதலமைச்சர்கள் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை

## எதிர்க்கட்சிகள் கொண்டுவர முடிவு

[கொழும்பு]

தென், வடமேல் மாகாண ஐக்கியதேசியக்கட்சி முதலமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவருவதற்கு எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளதாக ஐலன்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது. இம்மாகாணசபைகள் கூடும் முதலாவது நாள் இத் தீர்மானம் கொண்டுவருவதென பொதுமக்கள் முன்னணியும், ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சியும் தீர்மானித்துள்ளன.

மேற்படி இரு மாகாணசபைகளுக்கும் முதலமைச்சர்கள் நியமிக்கப்பட்ட முறையை எதிர்த்தே இந்த நம்பிக்கை இல்லாத தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளது.

இரு சபைகளினதும் நியமனங்கள் குறித்து தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் இரு சபைகளும் முதல் முறையாகக் கூடும் போது எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வரவுள்ளதாக லங்காசமசமாஜ கட்சி அரசியல் குழு உறுப்பினர் பற்றி வீரக்கோன் தெரிவித்தார். தெற்கு மற்றும் வடமேற்கு மாகாணசபைகளுக்குச் செய்யப்பட்டமுதலமைச்சர்கள் நியமனமானது சட்டத்துக்கு அமைவானது என்று கூறி மக்களைத் தவறான போக்கில் வழிநடத்த ஐ. தே. க. முயற்சிக்கிறது என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா

[10 ஆம் பக்கம் பார்க்க]

## இலங்கை வான்பரப்புள் 3 விமானங்கள் நுழைவு

(கொழும்பு)

இலங்கையின் வான் பரப்புக்குள் மூன்று விமானங்கள் அத்துமீறிப் புகுந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது.

கடந்த சனியன்று அம்பாறைப் பகுதிக்குள்புகுந்த இந்த விமானங்கள் தொடர்பாக விமானப்படை வட்டாரங்கள் விசாரணையில் ஈடுபட்டுள்ளன.

## இந்திய இராணுவத்தை அழைத்தவர் யார்?

(சென்னை)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக கடும் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள இந்திய படையை மீண்டும் வரவழைக்க நடவடிக்கை எடுக்குமாறு ஓய்வுபெற்ற சிறிலங்கா இராணுவத் தளபதி ஒருவர் முன்னாள் அமைச்சர், ஓய்வு பெற்ற நீதிபதிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள் ஜனாதிபதி விஜபதுங்காவை கோரியுள்ளதாக இந்து நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்கள் கையெழுத்திடாத கடிதம் மூலம் இவ் வேண்டுகோளை விடுத்ததாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது

## கணித பாடத்தில் விசேட செய்திட்டம்

1991, 1992 ஆகிய ஆண்டுகளில் க. பொ. த. சாதாரண தரத்தில் கணித பாடத்தில் சித்தியடையாது தொடர்ந்து கற்க முடியாத நிலையிலுள்ள மாணவர்களுக்கான விசேட செயலமர்வுகளை யாழ். மாவட்ட கணித, விஞ்ஞான மூல வள நிலையத்தில்நடத்ததிட்டமிடப்பட்டுள்ளது.

மேற்படிசெயலமர்வில் பங்குபற்ற விரும்புவோர் நிலையத்தில் எதிர்வரும் 3ஆம் திகதிக்கு முன்பாக உதவிக் கல்விப் பணிப்பாளர் (விஞ்ஞானம்) திருமதி அ. வேதநாயகத்துடன் தொடர்வு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

## தமிழீழ பொதுக்கல்வி தேர்வு விண்ணப்பங்களை பெறவும்

(யாழ்ப்பாணம்)

மேற்படி தேர்வுக்கான விண்ணப்பப்படிவங்களை 02 - 06 - 1993 புதன்கிழமை தத்தமது கோட்டப்பிரதிக் கல்விப்பணிப்பாளர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளவும். இவை பூர்த்தி செய்யப்பட்டு உரிய கட்டணங்களுடன் பிரதிக் கல்விப்பணிப்பாளரிடம் ஒப்படைக்கவும்.

பரீட்சைக்கு தற்பொழுது க.பொ.த.சாதாரணதரவகுப்பில் கற்பவர்களும், சென்ற வருடம் தோற்றியவர்களும், சித்தி பெறாதவர்களும். பாடசாலையினூடாக விண்ணப்பிக்க தகுதியானவர்கள். தேர்வு நாடிகள் ஒரு பாடத்திற்கு தோற்ற விரும்பின் விண்ணப்பக்கட்டணம் ரூ 15/-வும், ஆறுபாடத்திற்கு மேல் விண்ணப்பிப்பவர்கள் ரூ 100/-வும்பூர்த்தி செய்யப்பட்டவிண்ணப்பப்படிவத்துடன் தவறாது ஒப்படைக்குமாறு தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு ஆணையாளர் கேட்டுள்ளார்.

## பண்ணை சடலம் அடையாளம் காணப்பட்டது

(குருநகர்)

நேற்று முன்தினம் காலை யாழ். பண்ணைக் கடற் கரையில் ஒதுங்கிய ஆணின்அழுகிய சடலம் அடையாளம் காணப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக யாழ். காவல்துறை பணிமனையில் இருந்து அறிவிக்கப்படுகிறது.

தொல்புரம், சுழிபுரம் சின்ன அம்மன் கோவிலடியைச் சேர்ந்த வைத்திலிங்கம் திசவீரசிங்கம் (வயது 38) நான்கு பிள்ளைகளின் தந்தை என அடையாளம் காணப்பட்டது.

சடலத்தின் தலையிலும், மார்பிலும் சூட்டுக்காயங்கள் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சனியன்று இரவு கடற் தொழிலுக்குச் சென்றவர் திரும்பவில்லை என்றும் கொல்லப்பட்டவர் மனைவியுடன் தகராறு காரணமாக தாயாருடன் யாழ். ஐந்து சந்திப் பகுதியில் தங்கியிருந்த சமயம் கடற் தொழிலுக்கு சென்றவேளை மண்டைதீவு சிறிலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுககு இலக்காகி மரணிக்க நேர்ந்ததென்றும் தெரியவருகிறது. (21)

# கொழும்பில் தேடுதல் 500 தமிழர்கள் கைது


(கொழும்பு)

கொழும்பில் தமிழர்கள் மீதான கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. கடந்த சில தினங்களாக கொழும்பின் பல பகுதிகளிலும் தமிழ் மக்களின் வீடுகள் பொலிசாரால் சோதனையிடப்படுகின்றன.

நீர்கொழும்பு முதல் தெஹிவளை வரையான பகுதிகளில் இச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

கடந்த சில தினங்களில் இத்தகைய சோதனைகளின் போது 500க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் கைதாகியுள்ளனர். இதேசமயம் சோதனையின்போது பொலிசாரால் வீட்டிலுள்ள தமிழர்கள் மிரட்டப்படுவதாகவும், வீட்டிலுள்ள பொருள்கள் இவர்களால் கொள்ளையிடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வீரச்சாவு



2ஆம் லெப்டினனட் பழனி

வவுனியா பம்பைமடு கல்வெட்டை கிராமத்தில் தேசத்துரோகிகளால் கைது செய்யப்பட்ட மக்களை மீட்க நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவு அடைந்த 2ஆம் லெப்டினனட் பழனி (அந்தோனிப்பிள்ளை வில்வராஜா, அம்மிவைத்தான் ஈச்சங்குளம், சாஸ்திரி கூளாங்குளம், வவுனியா) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## மேல்மாகாண அமைச்சரவை நேற்று பதவி ஏற்பு

(கொழும்பு)

மேல் மாகாணசபை அமைச்சரவை நேற்றுக் காலை ஆளுநரின் முன்னிலையில் பதவி ஏற்றுக் கொண்டது முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க நீதி, சமாதானம், கலாசாரம், கல்வி, நிதி, திட்டமிடல், வேலைவாய்ப்பு ஆகியவற்றிற்கு பொறுப்பான அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

பெர்னாட் சொய்சா கைத்தொழில், சுற்றுலா, சமூக சேவை அமைச்சராகவும், ( 10ஆம் பக்கம் பார்க்க )

## கொழும்புத் துறைமுகத்தில் பெரும் இட நெருக்கடி

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தில் தற்போது பெரும் இட நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகவும், எனினும் இன்னும் பத்து தினங்களினுள் இந்த நெருக்கடி நீங்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

எனினும்பெருமழை காரணமாக கப்பலிருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் தாமதிக்குமானால் இந்த [10ஆம் பக்கம் பார்க்க]


## கிளாலிக் கடலில் புலிகள் தாக்குகின்றனர்

### கூட்டுப்படைத் தலைமையகப் பேச்சாளர்

(கொழும்பு)

கிளாலி கடற்பகுதியில் படையினர் மீது புலிகள் தாக்குதல் நடத்துகிறார்கள் இதனைப் பார்த்துக்கொண்டு வாழா இருக்கமுடியாதுஎன்று கூட்டுப்படைத் தலைமையகப் பேச்சாளர் நளின் அங்கம்மன கூறியுள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகை [10ஆம் பக்கம் பார்க்க)




1) ஐந்து வெற்றுப் போத்தல்கள் [ஜாம் அல்லது நெல்லி ரசம்] கொடுத்து ரூபா 25 பெறுவதுடன் அதிர்ஷ்ட சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

2) மாத முடிவில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

1ஆம் பரிசு – சுவர்க்கடிகாரம்
2ஆம் பரிசு – எவர் சில்வர் வீட்டுப் பாவனைப் பொருள்கள்
3ஆம் பரிசு – மாணவருக்கான பாடசாலை உபகரணங்கள்
மேலும் பத்து ஆறுதல் பரிசுகள்

3) பின்வரும் இடங்களில் அதிர்ஷ்ட சீட்டைப் பெற்றுக் கொள்ள முடியும்.
1) ரேஸ்லைன் இன்டஸ்றீஸ் - 14,சீனியர்வீதி, யாழ்ப்பாணம்.
2) அறிவகம் - சாவகச்சேரி
3) சுபாஸ் பேக் கவுஸ் - நெல்லியடி
4) சுந்தரம் அன் சன்ஸ் - சுன்னாகம்
5) சித்திவிநாயகர் நூல் நிலையம் - ஏழாலை மேற்கு சுன்னாகம்
6) சபாரிஸ் - சுண்டிக்குளி
7) நீதினி Q - சுன்னாகம்
8) செ. சுரேஸ் சோமசுந்தரப் புலவர் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.
9) ஸ்கந்தா மாஸ்ரர் - சங்கரத்தைச் சந்தி- வட்டுக்கோட்டை
10) இ. இராசதுரை, பத்திரிகை விற்பனை நிலையம் - இருபாலைச் சந்தி.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

[சி-6617]


## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



**சுப்பையா நீக்கிலஸ்**

தோற்றம்: 28-10-1938 மறைவு: 11-06-1989

திதி: 28-05-1993

பாவங்களின் வடிவங்களாய்
நடமாடும்
இருண்ட மனமுடைய தேசவிரோதிகளின்
இரக்கமற்ற இழிசெயலுக்கு
இலக்கான எம் தந்தையே
எங்கள் நெஞ்சங்களில்
நீந்திக்கொண்டிருக்கும் — உங்கள்
நினைவலைகள் தான்
எரிந்து கொண்டிருக்கும்
எங்கள் மனக்குமுறலகளை — ஓரளவு
சாந்தி கொள்ள வைக்கிறது
கண்ணில் கசியும் கண்ணீரால்
நெஞ்சு நிறைய அஞ்சலியை
ஆண்டவன் பாதத்தில் சமர்ப்பித்து
ஆராதிக்கின்றோம் — உங்கள்
ஆத்ம சாந்திக்காக!

''முருகபதி''
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

உங்கள் பிரிவால் வாடும்
அன்பு மனைவி, பிள்ளைகள்

(4926)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்
வேலுப்பிள்ளை
பாலசிங்கம்

தோற்றம்: 16-10-1923
மறைவு: 28-04-1993

எங்கள் குடும்பத்தின் ஒளிச்சுடராகவும் எமக்கும் மற்றோருக்கும்வழிகாட்டியாகவும் எல்லோரின் நன் மதிப்புக்குரியவராகவும் விளங்கிய எங்கள் அன்புத் தெய்வமே! கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் நல்வழியில் வாழ்ந்திட எம்மை ஆளாக்கி வழிகாட்டிய இதய தெய்வமே! உங்கள் நினைவலைகள் என்றென்றும் எங்கள் நெஞ்சத்தில் நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் வாடும்

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
''மனேகரா அரிசிஆலை''
கரவெட்டி வடக்கு,
கரவெட்டி.

(4984)


**BECON**

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

G.A.Q. 94
B.A. 94

பேராதனைப்
பல்கலைக்கழகம்
(வெளிவாரி)

பொருளியல்
S. வரதராஜன்
B.A. (Hons.)

ஆரம்பம்
B.A 29.5.93
சனி. 1.00 p.m.
G.A.Q.
1-6-93
செவ். 6.30 a.m.

(சி/6694)



**வரி விளம்பரம்**

துளிர்

தமிழ்நாடு, புதுவை அறிவியல் இயக்கம் வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் மாணவர்களுக்கு அதிக பயன் தரக்கூடியது. விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலையம் 405, அருச்சுனா றோட், யாழ்ப்பாணம். [4923]



**BECON**

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

A/L95

கலை, வர்த்தகம்
புதிய பிரிவு
ஆரம்பம்; 5-6-93
சனி 7-00 a.m.
வழமையான ஆசிரியர் குழு.

(சி-6693)


## நினைவு கூருகின்றோம் ... 1993-05-28

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் தப்பியோட முயற்சித்தபோது சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

அம்பாறை – அக்கரைப்பற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1986ஆம் ஆண்டு திருமலை மூதூர்ப் பகுதியில் வீரச் சாவெய்திய -

**கப்டன் சுஜி** [நவரத்தினம் இராசரத்தினம் - நாவலர் வீதி, அரியாலை - யாழ்.]

வவுனியா - பூந்தோட்டம் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1987ஆம் ஆண்டு வடமராட்சியில் சிறிலங்கா இராணுவத்தினர் 3ஆவது நாளாக மேற்கொண்ட ஒபறேசன் - லிபறேசன் நடவடிக்கையின்போது கொல்லப்பட்ட தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு யாழ். சுன்னாகத்தில் தேச விரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளர் -

**குலசேகரம் பத்மநாதன்** [திருவிளங்கம்]

மட்டு - வந்தாறுமூலையில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழ் இளைஞர்கள்.

யாழ். சாவகச்சேரியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மட்டுவில் வடக்கைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன், மற்றும் நாகர்கோயில், வண்ணார்பண்ணைப் பகுதிகளைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு திருமலை - ஆட்டுமா பாலத்தடியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச் சாவெய்திய -

**பாண்டியன்** [வேலாயுதம் தவராஜசிங்கம் - கன்னியா - திருமலை]

1992ஆம் ஆண்டு முல்லைத்தீவு - சிலாவத்தைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**உதயகுமார்/உதயன்** [அன்ரன் மரியதாஸ் பாலகிருஷ்ணா - துர்க்கா வீதி, 4-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு]

யாழ். பலாலி முகாம் சிறிலங்கா இராணுவத்தினருடன் வளலாயில் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**துரோணர்** [கோகுலசிங்கம் கோடீஸ்வரன் - தம்பலகமம் - திருமலை]

**இசைவாணன்/வசந்தன்** [இராசசிங்கம் கணேசதாஸ் - துன்னாலை, கரவெட்டி - யாழ்.]

**தங்கப்பன்/கேதீஸ்** [பொன்னையா திருலோகநாதன் - சரசாலை, சாவகச்சேரி - யாழ்.]

**இலக்கியன்** [சிவதாசபிள்ளை புஸ்பானந்தன் - கட்டுடை, மானிப்பாய் - யாழ்.]

**பவளன்** [மகேந்திரராசா நந்தகுமார் - கரையூர், தொண்டமானாறு - யாழ்.]

**சிவகுமாரன்** [சர்வானந்தம் ஜெயானந்தம் - வளலாய், அச்சுவேலி - யாழ்.]

**விவேகன்** (பாஸ்கரன் சிவனேசன் - பிள்ளையார் கோயிலடி, அளவெட்டி - யாழ்-)

**வீரச்செல்வன்/வ.னன்** (பாலசிங்கம் சின்னப்பு யோசப் எடிசன் - கரந்தன் மேற்கு, நீர்வேலி - யாழ் )

**ஆவுடையான்/ஆனந்தன்** (சிவகுரு ஞானேந்திரன் - சின்னப்பர் வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய் - யாழ்.)

மணலாறு - மண்கிண்டி மலையில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய -

**கௌபோய்** (லோகேஸ்வரன் - சர்வேஸ்வரன் - 8/8 சீனிவாசகம் வீதி, கொட்டடி - யாழ்.)

அச்சுவேலி - இடைக்காடு, பத்தமேனி, வளலாய், கதிரிப்பாய், தம்பாலைப் பகுதிகளில் இராணுவம் மேற்கொண்ட தாக்குதலில் பலியான 3 பொதுமக்கள்.

வல்லை - தொண்டமானாறு, பொலிகண்டிப் பகுதிகளை நோக்கிக் கடல், தரை, ஆகாய வழி மும்முனைத் தாக்குதல்களில் பெண், இளைஞர், 8 மாதக் குழந்தை உட்படப் பலியான 8 பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6692)

யாழ்ப்பாணம்

# அமெரிக்கா விளைவித்த கெடுதி
# ஈராக்கிய சிறார்கள் சாவோடு விளையாட்டு;

பாலகுமார்

வளைகுடாப் போர் எப்போதோ முடிவடைந்து விட்டது. ஆனால் அதன் தாக்கம் இன்னமும் முடியவில்லை. போர்க்களத்திலிருந்து போராயுதங்கள் எப்போதோ அகற்றப்பட்டு விட்டன. ஆனால் உடைந்த, சிதறிய அவற்றின் துண்டங்கள், எச்சங்கள், கைவிடப்பட்ட ஆயுதங்கள், உருக்குலைந்த டாங்கிகள் என அவை ஈராக் முழுவதும் பரவிக் கிடக்கின்றன. இவை தொடர்பாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பெரும் அதிர்வினை ஏற்படுத்திய சில முடிவுகளை வெளியிட்டுள்ளன. மூன்றாம் உலகிற்கான தகவல் வெளியீட்டு அமைப்பொன்றின் மூலமாக அண்மையில் அம்பலமாக்கப்பட்ட இத்தகவல்கள் மனித குலத்திற்கு நாசம் விளைவிக்கும் அமெரிக்காவின் செயலொன்றை வெளிப்படுத்தியுள்ளன.

ஏற்கனவே ஐ. நா வின் பொருளாதாரத் தடையால் வாடி மடியும் ஈராக்கின் இளம் சிறார்கள் அண்மைக் காலமாக பல புதிய, கொடிய, காரணங்கள் காணப்படாத மரும நோய்கள் பலவற்றிற்கு இரையாகி வருவது சருவதேச மருத்துவ வல்லுநர் பலரால் கண்டறியப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி ஈராக்கின் சுற்றுப்புறச் சூழல், குறிப்பாக மண் நீர் வளங்கள் அச்சமூட்டும் அளவிற்கு மாசடைந்து நச்சுத் தன்மை கொண்டதாக மாறி வருவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இளம் சிறார்கள் இடையே புற்றுநோய், லுக்கேமியா எனப்படும் இரத்தத்தில் வெண்குருதித் துணிக்கைகள் அதிகரிக்கும் நோய் ஆகிய இரண்டும் திடீரென வேகமாகப் பரவுவது இம்மருத்துவர் ஆய்வின் போது வெளியாகியுள்ளது.

எனவே இதற்கான காரணங்களைக் கண்டறிய இவ்வல்லுநர்கள் குழு முயன்றது. அங்குள்ள சிறுவர், சிறுமியர் தமது விளையாட்டுப்பொருள்களாக பயன்படுத்தப்படுவனவற்றைக் கண்டு இவர்கள் அதிர்ந்து போனார்கள். இச்சிறார்கள் வெற்றுச் செல்கள், கைவிடப்பட்ட ஆயுதங்கள், உடைந்த டாங்கிகள் போன்றவற்றினைத் தமது நாளாந்த விளையாட்டுப் பொருட்களாக்கி அவற்றோடு மிக நெருங்கி விளையாடுவது இவர்களால் கவனிக்கப்பட்டது. இதன் தொடர்பில் இவர்கள் மேற்கொண்ட ஆய்வுகள் ஓர் அதிர்ச்சியூட்டும் பயங்கர உண்மையொன்றை வெளிப்படுத்தியுள்ளன. அது தான் ஈராக் எங்கும் பல்லாயிரக்கணக்கில் கதிர் வீச்சுத் தன்மை கொண்ட - முழுமையாகப் பயன்படுத்தப்பட்டபின் வெற்றுக் கழிவாக வீசப்படும் யுரேனியத்தில் இருந்து தயாரிக்கப்பட்ட ரவைகள், செல்கள் என்பன பரவிக்கிடக்கின்றன என்பதுதான் அது. இவ்வகையிலான வேட்டுக்கள் 1970 ஆம் ஆண்டளவிலேயே அமெரிக்காவால் தயாரிக்கப்படலாயின. 3 அல்லது 4 கிலோகிராம் நிறையுள்ள இவை நீண்ட சுருட்டு வடிவில் அமைந்துள்ளன. இவ்வகையான வெற்று யுரேனிய ஊடுருவிகள் அல்லது துளைப்பான்கள் (Depleted Uranium Penetrators) என அழைக்கப்படுகின்றது. ஏனென்றால் இவை டாங்கிகள் அல்லது வேறு இராணுவ இலக்குகளின் உறுதியான உலோகக் கவசங்களைத் துளைத்துச் செல்லும் வலிமை படைத்தவை. ஆறு வாரம் நடந்த வளைகுடாப் போரின்போது இவை பல்லாயிரக்கணக்கில் போர்விமானங்கள், பீரங்கிகளிலிருந்து, டாங்கிகளிலிருந்து ஈராக்கை நோக்கி ஏவப்பட்டன.

இவ்வகைத் துளைப்பான்களின் மையப் பகுதி கதிர்வீச்சுத் தன்மையுள்ள அணுக்கழிவிலிருந்தே செய்யப்படுகின்றன. அணுக்குண்டு தயாரிப்பிற்காக யுரேனியம் செறிவூட்டப்படும்போது அதன் உப பொருளாக வெறும் பயனற்ற - ஆனால் கதிர்வீச்சுத் தன்மை கொண்ட இந்த யூரேனியக் கழிவு வெளிப்படுகின்றது. இது மிக்க உறுதியானது. அதே நேரத்தில் மிகத் தாராளமாகக் கிடைப்பது. இதனால் ஆயுத உற்பத்தியாளருக்கு இலவசமாக இக்கழிவு வழங்கப்பட்டது. அணுக்கழிவை அகற்றும் ஒரு வழியாகவும் இது ஆனது. இவற்றிலிருந்து உருவாகும் ரவைகட்கு பல பயன்பாடுகள் இருப்பதை இராணுவ உலகம் கண்டறிந்து கொண்டது. இவை சுடப்பட்டவுடனோ அல்லது ஏவப்பட்டவுடனோ தீப்பிழம்பு போல் கனன்று சென்று டாங்கிகளின் வேறு இராணுவ இலக்குகளின் மேற்புற உலோக கவசத்தை துளைத்துச் சென்று, உள்ளிருக்கும் எரிபொருளை தீப்பற்றச் செய்து உள்ளிருப்போரை உயிரோடு எரித்து விடும். இவ்வாறாக வளைகுடாப்போரின் போது 40தொன் யூரேனியம் கழிவு ரவைகள், செல்கள் போன்றவை பாவிக்கப்பட்டதாக இராணுவ உளவு அறிக்கைகள் கூறுகின்றன. எனவே இவை இன்று ஈராக்கின் சிறார்கள் கையிலே விளையாட்டுப் பொருள்களாகிவிட்டன. அதுமட்டுமன்றி முழு ஈராக்கிய குடிமக்களுமே முகம் கொடுக்க வேண்டிய அபாயங்கட்கு இனிவரும் காலங்களில் வழி ஏற்படுத்தியும் விட்டுவிட்டது.

அமெரிக்காவிலே இதனை தயாரிக்கும் உரிமம் பெற்ற கொணிவெல் (Honey Well) நிறுவனத்தினர் மின்னசோட்டா, தென்டகோட்டா மாநிலங்களில் சில குறிப்பிட்ட பொது நிலங்களில் இவற்றினை பரிசோதிக்க எடுத்த முயற்சி அப்பகுதி மக்களால் மிகக் கடுமையாக எதிர்க்கப்பட்டு வருகின்றது. பரிசோதனை முயற்சியின் போது வெளியாகிய நச்சுக் கதிர் வீச்சு நிலத்தடி நீரை மிக மோசமாக மாசுபடுத்தியது கண்டறியப்பட்டதே இதற்குக் காரணம். பொது நிலங்களை இவ்வாறு பயன்படுத்துவதை தடுக்குமாறு அமெரிக்க காங்கிரசிலேயே குரல் எழும்பியுள்ளது. ஏனென்றால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பொது நிலம் நிரந்தமாகவே கதிர் வீச்சு அபாயத்திற்குட்படும் நிலை இருப்பதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அத்தோடு இக் கருவிகளை இயக்கும் - பயன்படுத்தும் போர் வீரர்கட்கும் கதிர் வீச்சால் புற்றுநோய் அபாயம் தோன்ற வாய்ப்பு இருப்பதாகவும் கருதப்படுகின்றது. மேலும் இத்தகையவற்றினை ஏவும் டாங்கிச் சாரதிகள் போன்றோருக்கு ஒவ்வொரு 20-30 மணித்தியாலத்திற்கும் ஒருதடவை மார்பு எக்ஸ் கதிர் பரிசோதனைக்கு உட்படும் ''அளவு தாக்கம் ஏற்படும்'', என்றும் அறியப்பட்டுள்ளது'

இதைவிட இவை பரந்த வெளியில் ஏவப்படும் போது அல்லது பின் உடைந்து வீசப்பட்டுக் கிடக்கும் போதோ மிகஇலகுவான வழியில் இவற்றின் கதிர்வீச்சு கலந்து மனித உடலில் புகும் தன்மை மிக அதிகம். இவை மனித உடம்பினுள் புகுந்து அங்கு எலும்பு மற்றும் முக்கிய உறுப்புக்களில் இருப்பாக தங்கி பின் அங்கிருந்து கலங்களை தாக்கும் வேலையை ஆரம்பிக்கின்றது. இளம் சிறார்கள் இத்தகைய ஆபத்திற்கு அதிகம் உட்படுகின்றனர். ஏனென்றால் அவர்கள் வளரும் காலத்தில் கலங்கள்பலவாக பிரிந்து பெருகுவது மிக அதிகம் நிகழ்கின்றது. பிரித்தானிய உளவு நிறுவன அறிக்கையின்படி ஈராக்கில் மட்டுமல்ல குவைத்திலும் இனி வரும் காலங்களில் பல பத்தாயிரம் சாவுகளுக்கு இது காரணமாக அமையப் போகின்றது என்ற தகவலும் இத்தருணத்தில் வெளியாகியுள்ளது. ஆனால் அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனோ இவ் ஆயுதங்கள் மிக மிக குறைவான அணுக்கதிர் வீச்சினையே கொண்டிருப்பதாகவும், இவற்றினை அணுக்கதிர் வீச்சுள்ள ஆயுதங்கள் வரிசையில் சேர்க்க முடியாது என்றும் வழமை போல் கூறிவருகின்றது.

சில மாதங்கட்கு ஆய்வின் பொருட்டு இத்தகைய ரவை பொன்றினை 'தன்னோடு எடுத்துச் சென்ற புகழ்பெற்ற அல்பேட்சுவைட்சர் ஆய்வு நிறுவனவிஞ்ஞானி ஒருவர் சட்டவிரோதமாக அணுக்கதிர் வீசும் பொருளொன்றினைக் கொண்டு செல்கிறார் என்ற குற்றச்சாட்டின்கீழ் பெர்லின் நகரில் கைது செய்யப்பட்டது இங்கு குறிப்பிட வேண்டிய விடயம். பின் அவரிடமிருந்த ரவை கதிர்வீச்சினை தடுக்கும் ஈய முலாமிட்ட பேழையொன்றில் பாதுகாப்பாக முத்திரையிடப்பட்டு வைக்கப்பட்டது. ஆனால் இத்தகைய வசதிகள் அற்ற நிலையில் அபாயங்கள் பற்றிய விளக்கங்கள் எதுவுமே தெரியாத நிலையில் ஈராக்கின் இளைய தலைமுறை ஆபத்தான இவ்விளையாட்டினைத்தொடர்கின்றது. தொடர்வது மட்டுமன்றி இவ்வெற்று யுரேனிய செல்களை பயன்படுத்தி விளையாட்டுப் பொருள்களை செய்து வருகின்றது. அண்மையில் ஈராக்கின் பஸ்ரா நகரில் இத்தகையசெல்களைப்பயன்படுத்தி பொம்மலாட்ட பொம்மைகள் பலவற்றை செய்த சிறுவன் ஒருவன் 'லுக்கேமியா' வால் பீடிக்கப்பட்டுள்ளான்;

எனவே அமெரிக்கா ஒரு கல்லில் இரண்டு மாங்காய்போல அழிவு கருவிகளை செய்வதோடு மட்டுமன்றி தனது அணுக்கழிவுகளை அகற்ற ஒரு வழியும் கண்டுபிடித்துவிட்டது மூன்றாம் உலகத்தவர் தலையில் அணுக்கழிவைக் கொட்ட இப்படியும் ஒரு வழி.

# யாழ். மாவட்டத்தில் ஆரம்ப விஞ்ஞானக் கல்வி

யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க. சின்னத்தம்பி **யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளில் ஆரம்ப விஞ்ஞானம் கற்பித்தல்** என்னும் விடயம் குறித்து மேற்கொண்ட ஆய்வறிக்கையின் சுருக்கம் இங்கு தரப்படுகின்றது. யாழ். மாவட்டத்திலுள்ள 490 பாடசாலைகளில் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய நிலையில் 4, 5 ஆகிய வகுப்புகளுடைய பாடசாலைகள் 442 என அறியப்பட்டது. இவற்றில் 342 பாடசாலைகளைச் சேர்ந்த 517 ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட விபரங்களை ஆதாரமாகக் கொண்டுஇவ்வாய்வறிக்கைதயாரிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் கல்வி மாவட்டப் பாடசாலைகளில் ஆண்டு 4 வகுப்புக்களில் 1985 தொடக்கமும், ஆண்டு 5 வகுப்புகளில் 1986 தொடக்கமும் ஆரம்ப விஞ்ஞானம் என்ற பெயரில் விஞ்ஞானம் கற்பிக்கப்படுகின்றது. விஞ்ஞானக் கல்வியானது சூழலுடன் இணைந்ததாக, பிள்ளையின் வாழ்க்கையுடன் தொடர்புபடுத்திக்கற்பிக்கப்படுகின்றது. ஆண்டு 4 ஆரம்ப விஞ்ஞானத்துக்கான -மிகவும் விரிவாக எழுதப்பட்ட ஆசிரியர் வழிகாட்டி நூல், யாழ். கல்வித் திணைக்களத்தினால்1986 இல் வெளியிடப்பட்டு, இக் கல்வி திறம்பட விருத்திபெற ஊக்குவிக்கப்பட்டது.

மாணவரின் எதிர்கால முன்னேற்றத்துக்கு அத்திவாரமாக அமைய வேண்டிய ஆரம்பக் கல்வியானது, குறிப்பாக ஆரம்ப விஞ்ஞானக் கல்வியானது கல்வியாளர்கள், கல்வித்திணைக்களத்தினர், பொதுமக்கள் ஆகியோரின் கவனத்தை நியாயமான அளவுக்கு ஈர்த்ததாகத் தெரியவில்லை. ஆண்டு 5 இல் இந்நிலைமை மேலும் பரிதாபகரமாகமாறிவிடுகின்றது. ஆண்டு 5 புலமைப்பரிசில் தேர்வினை மையமாகக் கொண்ட அனைவரின் போக்கும் தமிழ், கணிதம் தவிர்ந்த ஏனைய பாடங்களை வலுவாகப் புறக்கணிக்கும் வகையில் அமைந்து விடுகின்றது. ஆய்வுக்கூடாக வெளிக்கொண்டுவரப்பட்ட, யாழ். மாவட்டத்தில் ஆரம்ப விஞ்ஞானக் கல்வி பற்றிய பல விடயங்கள் இங்கு தரப்படுகின்றன.

## விஞ்ஞானக் கல்வித் தகைமை

ஆரம்பகால விஞ்ஞான ஆசிரியர்களின் விஞ்ஞானக் கல்வித் தகைமையானது பல தரப்பட்டதாக உள்ளது.விஞ்ஞானக் கல்வித் தகைமையை அறவே பெற்றிராதவர்கள் (8.1 சதவீதம்), க. பொ. த. (சா/த) வரை கூட விஞ்ஞானக் கல்வியைக் கற்றிராதவர்கள் (6.6 சதவீதம்) க. பொ. த. (சா/த) வரை மட்டும் கற்றவர்கள் (37.9 சதவீதம்) க. பொ. த. (சா/த)இலும் உயர்வான விஞ்ஞானக் கல்வியைப் பெற்றவர் (47.4 சதவீதம்) என இவர்கள் காணப்படுகின்றனர். போதுமான அளவு விஞ்ஞானக் கல்விப் பின்னணியாக க. பொ. த. (சா/த) கருதினாலும் கூட ஏறத்தாழ ஏழில் ஒரு பங்கினர் இத் தன்மையைக்கூடப் பெற்றிருக்கவில்லை. இது கற்பித்தலில் ஒரு பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தவல்ல ஒரு காரணியாகும். ஆரம்ப விஞ்ஞானம் கற்பித்தலுக்கு ஏதேனும் ஒரு வகையில் உதவுவதாக இருக்கக் கூடியதான கல்வித் தகைமையைப் பெற்றவர்கள் 36.4 சத விகிதத்தினர். இதுவும் வெகுகுறைவே.

## கற்பித்தற் பயிற்சி

ஆரம்ப விஞ்ஞான ஆசிரியர்களில் 44சத விகிதத்தினர் மட்டுமே கற்பித்தல் தொடர்பான சேவைக்காலப் பயிற்சியைப் பெற்றவராவர். இப் பயிற்சிகூட நிறைவானதென்றோ அல்லது போதுமானதென்றோ கருதப்பட முடியவில்லை. யாழ். கல்வி மாவட்டத்தில் 1986 தொடக்கம் 1989 வரையிலான காலப்பகுதியில் சராசரி வருடத்துக்கு 4சேவைக்காலப் பயிற்சி வகுப்புகள் என்ற வீதத்தில் இவை இடம் பெற்றன. 1990 தொடக்கம் வருடத்தில் ஒரு தடவை மாத்திரமே ஆரம்ப மட்டத்து ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு இடம் பெற்றுள்ளதாக அறியமுடிகின்றது, இப் பயிற்சி வகுப்பிலும், ஆரம்ப விஞ்ஞானம் சார்ந்த பயிற்சிக்கு இரண்டு மணித்தியால நேரமே ஒதுக்கப்பட்டிருந்தது. எனவே ஆரம்ப விஞ்ஞானத்துக்கென மேலதிக ஆலோசகர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை யாழ். கல்வித்திணைக்களம் உடனடியாக மேற்கொள்ளுதல் மூலம் இக்குறைபாட்டினை நிவர்த்திக்கலாம்.

மேலும் வழங்கப்பட்ட சேவைக்காலப் பயிற்சிகளில் பங்குபற்றிய 272 ஆசிரியர்களின் (52.6 சதவீகிதம்) கருத்துப்படிவழங்கப்பட்டசேவைக்காலப் பயிற்சியானது விஞ்ஞானக்கல்விக்குப் பெரிதும் பயனுடையது என்னும் கருத்தினை 137 பேர் மட்டுமே தெரிவித்திருந்தனர். தொகுத்து நோக்கின் பெரும்பாலான ஆரம்ப விஞ்ஞான ஆசிரியர்களுக்குச் சேவைக்காலப் பயிற்சி கிடைக்கவில்லை என்பதும் வழங்கப்பட்ட சேவைக் காலப்பயிற்சியும் பயன்குறைவானது என்பதும் புலனாகின்றது.

## ஆலோசனைகள்

O 1972 ஆம் ஆண்டு, ஆண்டு 6 இல் அனைவருக்கும் விஞ்

(7ஆம் பக்கம் பார்க்க)

சிறுகதை

# முருகப்பெருமானும் கண்ணன் மாமாவும்

கி. சிவஞானம்

"அம்மா அம்மா, சித்தப்பா சித்தப்பா" என்ற வக்சியின் குரல்சிவத்திற்குகேற்றை திறக்க முன்பே கேட்டுது. அவன் எதிர்பார்த்த ஒன்று தான்- மாதம் ஒரு முறை அவனுக்கு அந்த சத்தத்தை கேக்கவேணும் போலிருக்கும். அதைக் கேட்கிறதிலையும், ஒரு மகிழ்ச்சி அவனுக்குள்ளே அலை மோதும். இப்படி எல்லாரும் எல்லார் மேலேயும் அன்பு செலுத்தத் தொடங்கினால் - நினைத்த சிவம் தனக்குள் சிரித்தபடி கேற்றை திறந்து சைக்கிளை உள்ளுக்கை விட்டுப் பூட்டினபடி முற்றத்தைப் பார்த்தான். 'சித்தப்பாசித்தப்பா நான்சூரியன்பார்த்தனான்' விசயத்தை விளங்கிக் கொள்ள சிவம் "எங்கை பார்த்தனீர்" என்றபடி தன்ரை பாக்கில் இருந்த ஒரு கப்பல் வாழைப்பழத்தை எடுத்துக்கொடுத்தான் "நாங்கள் நல்லூரிலைசூரியன் பார்த்தனான்" என்ற வக்சி வாழைப்பழத்தை விறுவிறுவென உரித்தான். அவனுக்கு கப்பல் வாழைப்பழம் என்றால் கொள்ளை ஆசை. சிவம் ஆசிரிய கலாசாலையிலிருந்து வருகிற ஒவ்வொரு முறையும் திருநெல்வேலிச் சந்தையில் இவனுக்கெண்டே இதை வேண்டிக்கொண்டு வருவான். வாழைப்பழம் இல்லையெண்டா அவன் கிறுகிறுவென தாவியேறி தோளிலிருந்துகொண்டு தலையை ஒரு உலுக்கு உலுக்குவான்.

வக்சிக்கு மூண்டரை வயது தான் கொஞ்சம் கறுப்பு. ஆனால் எந்த நேரமும் துருதுருவெண்டிருப்பான் ஆள் பெரிய தொக்கையில்லையெண்டாலும் ஒல்லியெண்டும் சொல்ல ஏலாது. நடுத்தரம். அனேகமாய் அவனுக்கு மண்ணுக்கை விளையாடத்தான் பிடிக்கும். அவன்ரை அம்மா எத்தனைதரம் சொன்னாலும் அந்த வெள்ளைப் புழுதிக்கை இருக்கிறதுதான் வக்சிக்கு விருப்பம் போல, இல்லாட்டி சிவம் வந்த உடனேயே கையில பிடிச்சிழுத்து தானும் இருந்து அந்த புழுதியைக் கூட்டி வீடுகட்டச் சொல்லி கட்டிக்காட்டி, சிவத்திற்கு இந்த இரண்டு நாளும் எப்படி போகுமெண்டே தெரியாது. ஞாயிறு பின்னேரம் வக்சி கேட்பான். 'சித்தப்பா இண்டைக்கு போகப்போறியளே'' பாவமாய் இருக்கும். அவனை பார்க்க சிவம் சமாளிப்பான். "போனால் தானே வாழைப்பழம்".

"தம்பி வக்சி, இங்கை வாங்கோ. சித்தப்பாவை ஏன் கரைச்சல் படுத்திறாய்''. வக்சியின் அம்மாவின் குரல் அதட்டும். வக்சி வாழைப்பழத்தை விறுவிறுவென்று சாப்பிட்டுக் கொண்டு தாயிடம் ஓடினான். "சைக்கிள்ளை வந்தது. களைச்சிருப்பியள் வக்சியோட...'' என்றபடிஅவன்ரை அம்மா குசினிக்குள் போனா. சிவம் விறாந்தையில கிடந்த கதிரையை இழுத்துப்போட்டபடி சிறிது சாய்ந்தான். வாழைப்பழம் தின்ட புழுகத்தில வக்சி துள்ளிக்குதித்து வந்தான். சிவத்திற்கு தெரியும் இனி ஒரு அரைமணித்தியாலம் மடியில்தான் இருப்பான் எண்டு. இந்த நேரத்தில்தான் சிவம் பெரிய கஸ்ரப்படுவான். ஆயிரம் கேள்விகள். அப்பாவிட்டை, அம்மாவிட்டை கேக்கஏலாத கேள்விகள். அவனுக்கு தலை சுற்றும். விரிவுரையாளராக இருக்கிற அவனுக்கு கேள்விகள் பற்றிய கவலை, பயம் வந்ததில்லை. கேள்வி கேட்கிற மாணவனை நல்லாப் பிடிக்கும். ஆனால் வக்சிக்கு மட்டும் பயம். அவன்ரை கேள்விகள் அப்பிடி. "சித்தப்பா ஏன் சுவாமிக்கு முட்டை குடுக்கிறேல்லை. அவர் பாவம் எல்லே'' கோவிலுக்கு போட்டு வந்தவன் மடியிலிருந்து கேட்டான். "சித்தா ஏன் நாங்கள் பூக்கிறதில்லை?'' முற்றத்தில் நிண்டு பூத்துக் சொரியிற கொடி அலரியைக் காட்டி பொறாமையோடு கேட்டான். உலகம் அவனுக்குள் ஊடுருவும் காலம் சரியான பதில், அதேவேளை அவன் விளங்கிக் கொள்ளவும் வேணும். உண்மையிலேயே சிவத்திற்கு பயம்.

வக்சி மடியில இருக்காமல் பின்னுக்கு போனதால ஒரு வித சந்தோசத்தோட சிவம் அப்படியே கண்களை மூடினான்.

காது இரண்டும் வலியெடுக்கிற மாதிரி இழுபட திரும்பிப் பார்த்தான். வக்சி "சித்தா நீ சூரியன் நான் ஆட்டுறன்'' என்றபடி முதல் வலது பக்கம் திருப்பினான். பிறகு இடது பக்கம் காது இரண்டும் வலியெடுத்தது. மாறிமாறி வேகமாய் ஆட்டத்தொடங்கினான். காது விண்ணென்று வலியெடுத்தது. தேத்தண்ணியோட வந்த அண்ணியைப் பார்த்து "என்னவாம் இவன் சூரியன் எண்டு என்னைப் போட்டு கொல்லுறான்'' என்றான் சிவம். சிரித்தபடி "தம்பிவக்சிவிடுங்கோராசா'' என்ற அண்ணி "நல்லூருக்கு வந்தனாங்கள். அங்கை சூரன் பார்த்தவன். அதைத்தான் இவன்...'' சிவம் சிரிப்பை அடக்கமுடியாமல்வக்சியைத் தூக்கி மடியில்போட்டான். "சித்தா சூரன்எண்டால் ஆர்?'' என்றபடி பல்லைக்காட்டி நாக்கை வெளியில விட்டு கண்ணை முழுசிக்காட்டி தான் சூரனாக சிவத்தை வெருட்டினான். "சூரன் எண்டால் அரக்கன். அவன் ஆக்களைக் கண்டால் பிடிச்சு அடிச்சு கொண்டு போடுவான்'' என்றான் சிவம்.

"அப்ப எங்களை கொல்லேல்ல தானே''

"இல்லையில்லை''

"அது துவக்கில்லையோ?''

"துவக்குத்தான், துவக்கு மாதிரி''

"கண்ணன் மாமாவும் துவக்குவைத்திருக்கிறாரல்லே அவரும்சூரனையேசுடுறவர்?''

"வக்சி சித்தப்பாவைக் கொஞ்சம் சும்மாய் இருக்க விடு! வந்த நேரம் தொட்டு அலட்டிக் கொண்டு நிற்கிறாய்''. அண்ணி என்ரை பரிதாப நிலையைக் கண்டு தான் கூப்பிடுறா போலை. என்றெண்ணிய சிவம் "சூரனை முருகன்தான் கொல்லுவார்'' என்றான்.

வக்சி ஏதோ யோசித்தபடி தாயைப் பார்த்தான். சிவத்திற்கு கண்ணன் மனசிலை வந்தான். கண்ணனும் வக்சியைப்போலத்தான். அண்ணா கல்யாணம் கட்டி அவனை எனக்குத் தெரிந்த காலத்திலையிருந்து கண்ணன் காணாமல்போய், திரும்பி வந்து. வந்து வந்து போய்க் கொண்டிருக்கிற இந்தக்காலம் வரைக்கும் எத்தனை கேள்விகள். '58இலை ஏன் எங்களுக்கு அடிச்சவை?'' "உண்மையாய் இலங்கையிலை முந்தி எத்தனை நாடு இருந்தது?'' "தமிழர் தேசிய இனமோ?'' இப்பிடி இப்பிடி எத்தனை கேள்வி கேட்டான். எத்தனை தரம் சண்டை பிடித்திருப்போம்! இதுகளையிட்டு கடைசியில் இப்ப ஒரு வருசத்துக்கு முதல்நான்வரைக்கைதான் கண்ணனுக்கு இருபதாவது பிறந்தநாள். அண்ணி எவ்வளவு கவனமாய் சந்தோசமாய் தன்ரை கடைசித் தம்பியின்ரை பிறந்த நாளைக் கொண்டாடினார். அதுக்கடுத்தமுறைநான் வரையிக்கை கண்ணனைக் காணவில்லை. பிறகு பிறகு இடைக்கிடை துவக்கோடை வந்து வக்சியை தூக்கி வைச்சிருந்துட்டு போறான். வக்சி திடீரெனக் கேட்டான்: "ஏன் அப்ப கண்ணன்மாமா; துவக்கு வைச்சிருக்கிறார்?'' எதைச் சொல்றதுஎப்பிடிச்சொல்றது? சொன்னால் விளங்குமோ? இன்னும் எத்தனை ஆயிரம் கேள்விகள் வரும்.

"அவனுக்குப் பயம்''

"ஆருக்கு?''

"முருகனுக்கு''

"ஏன்?''

"அவரிட்டை வேலிருக்கு''

"வேல் எண்டால்..''

"ஆயுதம். துவக்குமாதிரி'

"அப்ப கண்ணன் மாமாவும் முருகனே!''இது வக்சியின் கேள்வி.

"இல்லை இல்லை. அவர் மனிசர் எங்களை மாதிரி'' "அப்பமுருகன்...''வக்சிஇழுத்தபடி சிவத்தைப் பார்த்தான்.

"அவர் கடவுள் எங்கடை துன்பங்களை போக்கி சூரனை சாக் கொண்டு விடுதலை தர வேலோட வந்தவர்.''

"வேல் சுடுமோ'.

"கண்ணன் மாமா ஏன் துவக்கு வைச்சிருக்கிறார்?'' வாயிற்குள்ளை சிவம் ஒரு முறை சொல்லிப் பார்த்தான்.

"வக்சிக்குட்டி.. ஆர் எங்களை அடிச்சு துன்பப்படுத்தி அநியாயம் செய்யினையோ, அவை எல்லாரும் சூரன்மார் தான். அப்பிடியான ஆக்களை ஆர் திருத்த; அடிச்சாவது திருத்த வெளிக்கிடுகினமோ அவை எல்லாம் முருகப்பெருமானைப் போலத் தான்''. சொல்லியபடி வக்சியை முத்தமிட்டான். அவனுக்கு அது விளங்கேல்லையெண்டது சிவத்திற்கு ஆச்சரியத்தைத் தரேல்லை. எங்களுக்கையே பெரிய பெரிய ஆக்களிலையே கனபேருக்கு இது விளங்கேல்லையெண்டால் வக்சிக்கு மட்டும் உடனை எப்பிடி விளங்கப் போகுது?

அடுத்த கேள்விக்கு ஆயத்தமாகிற வக்சியை தாயிட்டை கொடுத்திட்டு வீதியை பார்த்தான். வாகனமொன்று வேகமாய் விரைந்து கொண்டிருந்திது. தூரத்தில் குண்டுவீச்சு விமானம் ஒண்டு குத்திப் பதிஞ்சு மீள எழும்பிற சத்தம் காதுகளை அதிர வைச்சுக் கொண்டிருந்திது.

## எங்கே போனீர்கள்?

எங்கே போனீர்கள்...?
வழி தவறி வந்தவன் போல்
ஒரு நிமிஷத் தயக்கம்
இந்தத் தெருதான்!
தொலைவில் தெரியும் மாதா கோவில்...
இந்த மண்ணுக்கேயுரிய புழுதிப் படலம்
எண்பத்து மூன்றிலே இடிந்து போன
அரசடி மண்டபம்..
இந்தத் தெருதான்!

புழுதிப் பூச்சுப் படிந்த
"பூட்ஸ்'' காலால்
எரிந்த கட்டைகளை விலக்கி
பாதை செய்து நிமிர
தோளிலிருந்து நழுவும் துப்பாக்கி
என் மனம் போல கனக்கிறது.
குண்டு மழை பொழியும்
சண்டைப் பறவைகளால்
சமாதியாக்கப்பட்டது போக
எஞ்சியிருக்கும் அத்திவாரம் மட்டும்
மௌனமாக வரவேற்கிறது.

எங்கே ?
எங்கே போனீர்கள்...?
எனது குரலை காற்று திருடிக் கொண்டது.
போர்க்களத்தில் வேட்டோசை கேட்டு
அஞ்சும் எதிரியைவிட
இந்த கனத்த மௌனத்தைக் கண்டு
நான் அஞ்சுகிறேன்.
உடைந்த சட்டி பானைத் துண்டுகள்...
நொருங்கிய கண்ணாடிச் சிதறல்கள்...
என் கால் பட்டு
அமைதியைக் கொன்று போடுகின்றன.

எங்கே...?
கண்ணீரோடு விடை கொடுத்த
என் தாய் எங்கே?
துப்பாக்கியைத் தடவிப் பார்த்து
மகிழும் என் தம்பி எங்கே...?
அண்ணா அண்ணா என்று
எனைச் சுற்றிவரும்
செல்லத் தங்கை எங்கே?
மாலை போடப்பட்ட
அப்பாவின் படம்கூட இல்லையே?

அந்த இடுகாட்டிலிருந்து
எழுந்து நடக்கும்போது...
சாம்பல் கலந்த புழுதியில்
முன்னைவிட அழுத்தமாய் பதியும்
என் 'பூட்ஸ்' அடையாளங்கள்.

- வினோதினி

## வழிகாட்டும் சில முன்னோடிகள் !

★ தன்னை வெட்டுபவனுக்கும் நிழல்கொடுக்கும் பெருந்தன்மையை மரத்திடமிருந்து புரிந்து கொள்ளலாம்.

★ மின்மினிப்பூச்சிபறக்கும் போது தான் பளபளக்கிறதைப்போல், சோம்பிக் கிடக்காமல் உழைக்கும்போதுதான்மனிதன் பிரகாசிக்கிறான் என்பதை அறிந்து கொள்ளலாம்.

★ தனது பிற்காலத்திற்கும் சேமித்து வைக்க வேண்டும் என்பதனை எறும்பிடமிருந்து உணர்ந்து கொள்ளலாம்.

★ குடும்பத்தினருடன் கூட்டாக இன்ப துன்பங்களைப் பகிர்ந்து இல்வாழ்க்கை நடத்தவேண்டுமென்பதை தேனீக்களிடமிருந்து கற்றுக் கொள்ளலாம்.

★ தான்எவ்வளவு வலிமையாக இருந்தாலும், பாகனின் அங்குசத்திற்கு அசையும் யானையிடமிருந்து. பணிவுடன் பழகக் கற்றுக் கொள்ளலாம்.

யாழ்ப்பாணம்

# காதல் திருமணம் என்றதுமே இடிகேட்ட பாம்புபோல அதிர்ச்சியடைவது ஏன்?

க. தணிகாசலம்

சீதனப் பிரச்சினை பற்றிய விவாதத்தை ஆரம்பித்து வைத்து, எனது சுய அனுபவ உலகத்திலிருந்து நானாக கண்டறிந்த சில உண்மைகளை துணிவுடன் எடுத்துரைத்த குற்றத்திற்காக பலருடைய பல்லுக்கு பதமாக வேண்டிய பரிதாப நிலைக்கு ஆளாகியிருக்கிறேன். எனது கருத்துக்களைபலர்விமர்சித்திருக்கிறார்கள். சிலர்கருத்துகளுக்கு பதில் சொல்லாமல் ஆள்மீது பாய்ந்திருக்கிறார்கள். நான் எந்த யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என ஒருவர் கேள்வி எழுப்பியிருக்கிறார். வேறு சிலர் என்னைப் பழமைவாதி என்றும் ஆணாதிக்கவாதி என்றும், சாடியிருக்கிறார்கள். இந்தச் சொல் அம்புகளால் நான் பாதிக்கப்படவில்லை. ஆயினும் பண்பான முறையில் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதை விடுத்து, கட்டுரையாளன்மீது பாய்வது தமிழர் பண்பாட்டு மரபிற்கு உகந்ததல்ல. ஒரு விவாத மேடை என்பது சொற்போர் நடத்தும் யுததகளம் அல்ல. ஒரு பொருள் பற்றி ஆக்கபூர்வமான கருத்துக்களை பரிமாற்றம் செய்து கொள்ளும் சிந்தனைக் களமாக அது அமையவேண்டும். சிந்தனையைத் தூண்டும் ஒரு சமூக சர்ச்சைக்கு 'ஈழநாதம்' களம் அமைத்துக் கொடுத்ததை நான் வரவேற்கிறேன். ஆயினும் இந்த சர்ச்சை தனிமனித போர்க் களமாக மாற விடாமல், தனிமனித கௌரவத்தையும் எண்ண சுதந்திரத்தையும் பேணிக்காப்பது பத்திரிகை ஆசிரியரின் பொறுப்பு. இந்த வகையில்என்மீது சுமத்தப்பட்டகுற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் கருத்துச் சுதந்திரம் எனக்கும் உவந்தளிக்கபபடுமென எதிர்பார்த்து நான் இதனை எழுதத் துணிகிறேன்.

நான் ஒரு தத்துவ ஞானியோ அலலது சமூக விஞ்ஞானியோ அல்லன். அல்லது எழுத்துக் கலையில் பயின்று சொற சிலம்பாடும் ஆற்றலும் எனக்கு இல்லை. நான சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனிதன். ஆயினும் உலகானுபவத்திலிருந்து நிறையக் கற்றுக் கொண்டவன். அந்தப் பட்டறிவிலிருந்தே நான் எழுதுகிறேன். சாணக்கியன் கூறுவது போல நான் வேறு எந்த யுகத்திலும் வாழ்வில்லை. நான் இந்த யுகத்தில், இந்த சமுதாயததில், இந்தக் கால கட்டத்தில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். நான் ஒரு தனிமனிதனாக வாழ்க்கையிலிருந்து அந்நியப்படடு, கற்பனை உலகில் சஞ்சரிக்கவில்லை. நான் இந்த யாழ்ப்பாணத்து மண்ணில் பிறந்து, வளர்ந்து யாழ்ப்பாணதது சமூக பண்பாடடு உலகில் ஒன்றறக் கலந்து, ஒரு சமூக மனிதனாக, அதுவும் அசல் யாழ்ப்பாணத்து மனிதனாக 60 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறேன். இந்த நீண்ட அனுபவத்தில்யாழ்ப்பாணத்து பணபாட்டு உலகையும், எனது சமூகத்து நடப்பியலையும் நான விளக்கிக் கொள்ளவில்லை என என்மீது குற்றம் சாட்டுவது சிறுபிள்ளைத்தனமானது. மூன்று பெண்பிள்ளைகளைப் பெற்று அவர்களுக்கு வாழ்வளிக்க நான்பட்ட துயரின் ஆழத்தைப் புரிந்து கொள்ளாமல் தணிகாசலத்தாருக்கு சீதனத்தின் தாற்பரியம் புரியவில்லை என்பது போல ஒருபாடசாலை மாணவியான பாரதிப் பிரியா எழுதுவதைப் பார்க்கும்பொழுது வேதனையாக இருக்கிறது.

நான் ஒரு விதண்டாவாதத்தையும் முன்வைக்க வில்லை. பெண்ணினம் போர்க் கோலம் கொள்ளும் வகையில் விபரீதமான கருத்துக்களையும் நான் கூறிவிடவில்லை. ஒட்டுமொத்தத்தில் நான் வலியுறுத்திய கருத்து என்னவென்றால், சீதனம் பெண்களின் பிரத்தியேக பிரச்சினை இல்லை. இது ஒரு சமூகப் பிரச்சினை என்பது தான். அதுவும் இந்தப் பிரச்சினை ஒரு குடும்பப்பிரச்சினை இதில் ஆண்களும் குறிப்பாக குடும்பத்தலைவர்களும் பாதிக்கப்படுகிறார்கள் என்பது தான் எனது வாதம்.

இதில் என்ன தவறு இருக்கிறது? ''இது தணிகாசலத்தார் போடும் தப்புத் தாளம்'' என்று எப்படிச் சொல்லுவது?

சீதனப் பிரச்சினையை ஒரு பெரிய பளுவாக யார் சுமக்கிறார்கள் என்று யாழ்ப்பாணம் அடங்கிலும் ஒரு கருதுக் கணிப்பைச் செய்து பாருங்கள் நிச்சயமாக, பெற்றோரிடம் அதுவும் குடும்பத் தலைவனிடம் தான் இந்த துன்பப்பளு சுமத்தப்படுகிறது என்ற சமூக உண்மை தெரியவரும்.

சீதனம் என்ற சமூக நோய் யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு குடும்பத்தையும் பாதிக்கிறது. குடும்ப நிலைவரங்களுக்கு ஏற்றவாறு இந்தப் பாதிப்பின் ஆழமும்அகலமும் அமைகிறது. குடும்பத் தலைவன் என்ற ரீதியில், குடும்பத்தை நிர்வகித்து பாதுகாப்பவன் என்ற ரீதியில் தனது பிள்ளைகளின் எதிர் காலம் சுபீட்சமாக அமையவேண்டும் என ஆசைப் படுபவன் என்ற ரீதியில், ஒரு தந்தைக்கு சில சமூகப் பொறுப்புகள் உண்டு இந்தப் பொறுப்புகளை சுமப்பவன் என்ற ரீதியில் சீதனப் பிரச்சினையையும் அவனே சுமந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

ஒருவனின் தனிப்பட்ட சொந்த அனுபவம் வேறு, சமூக உண்மை வேறு என்று சாணக்கியனும். பாரதிப் பிரியவும் என மீது சாடுகிறார்கள். ஒருவனின் தனிபபட்ட அனுபவம் எங்கிருந்து ஐயா வருகிறது. வானத்தின் சூன்யத்திலிருந்து மூளைக்குள் கொட்டப்படுகிறதா? அல்லது மனக் குகையின் ஆழத்திலிருந்து தானாக ஊற்றெடுக்கிறதா? அனுபவம என்பது சமூக உலகத்திலிருந்து, சமூக உறவுகளிலிருந்து ஏற்படும் பட்டறிவு அல்லவா? எனது அனுபவமும் சமூகஉலகத்திலிருந்து பெறப்பட்டது தான். நான் முற்றுந் துறந்த முனிவனாக உலகததிலிருந்து அந்நியப்பட்டு வாழவில்லை.

நான் இந்த யாழ்ப்பாண மண்ணில் ஆழவேரோடிய மரமாக, யாழ்ப்பாணத்தின் சமூகக் காற்றைச் சுவாசித்து வாழ்பவன். எனது தனிப்பட்ட அனுபவம் இந்த சமூக எதார்த்தத்தின் வெளிப்பாடு அன்றி வேறொன்றுமல்ல.

நான் எனது பெண்பிள்ளைகளுக்கு சீதனம் தேடுவதற்காக மாடாக உழைத்து ஓடாண்டியாகிப் போனேன் என்ற அனுவ உண்மையைக் கூறும்பொழுது யாழ்ப்பாணத்து மனிதர்கள் (குடும்பத் தலைவர்கள்) அதனை ஆழமாகப் புரிந்து கொள்வார்கள். ஏனென்றால் என்னைப்போல ஆயிரமாயிரம் தணிகாசலத்தார்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கிறார்கள். அவர்களும் என்னைப் போலவே வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி, விரதம் கிடந்து சீட்டுப் பிடித்தவர்கள். பெண்பிள்ளைகளைப் பெற்ற பாவத்திற்காக இந்தப் பாழாய்ப் போன சமூகத்தில் இருந்து வதைபடுபவர்கள். இந்த சோகமயமான சமூக நிதர்சனத்தைத்தான் எனது சொந்த அனுபவமாக எழுதியிருந்தேன். இதில் என்ன தவறு இருக்கிறது?

சீதனப் பிரச்சினை ஒரு குடும்பப பிரச்சினை என்பதும் இதன் பெரும் பளுவை குடும்பத் தலைவனே சுமக்க வேண்டியிருக்கிறது என்பதும் எனது நிலைப்பாடு. குடும்பம் சமூகத்தின் அடிப்படையான அலகு என்பதில் இப்பிரச்சினையை ஒரு சமூகப் பிரச்சினையாக அணுக வேண்டும் என்பதும் எனது வாதம்.

சீதனக் கொடுமையால், தாம்பத்திய வாழ்வில் பிரவேசிக்க முடியாது இரத்தக் கண்ணீர் சிந்தி வாழும் பெண்களின் அவல நிலையை நான் உதசீனம் செய்யவில்லை. இந்த மெய்யுண்மையை நான் மூடி மறைக்க முயற்சிக்கவுமில்லை. ஆனால் சமூக அந்தஸ்து, சாதியம், உததியோகம் பார்க்கும் படித்த மாப்பிள்ளை என்ற ரீதியில் போலிக் கௌரவங்களால் ஈர்க்கப்பட்டு திருமணமாகாது ஏங்கித் தவிக்கும் பெண்களும் உண்டு என்பதை மட்டும் சுட்டிக் காட்டினேன்.

பாரதிப் பிரியா சுட்டிக் காட்டியதுபோல பெண்களும் உழைக்கத்தான் செய்கிறார்கள் என்ற உண்மையை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இந்த உழைக்கும் பெண்களின விகிதாசாரம் மிகக் குறைவானது. சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள பெண்களில் பெரும்பாலர்னோர் உழைக்கிறார்கள். ''நெசவடிக்கும் பெண்களும். பாய் பெட்டி, கடகம் இழைக்கும் பெண்களும் எம்மிடையே நிறைய இருககிறார்கள்'' என பாரதிப்பிரியா கூறுவதை நான் மறுக்கவில்லை. ஆனால் இவர்கள் வியர்வை சிந்தி உழைப்பது சீதனத்திற்காக அல்ல. நாளாந்த வாழ்க்கையை ஒட்டுவதற்காகவே இந்த ஏழைப் பெண்கள் உழைக்க வேண்டியிருக்கிறது. படித்த நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த பெண்களுக்கு வேலை வாய்ப்பு மிகக் குறைவு அதாவது அவர்களது ''அந்தஸ்திற்கு'' ஏற்ற வேலை கிடைப்பதில்லை. இவர்கள் பாய், பெட்டி, கடகம் இழைக்கவோ வயல்களில் களைபிடுங்கவோ அல்லது நெசவடிக்கவோ தயாரில்லை. ஆகவேதான் இவர்கள் வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கிறார்கள் என்று தான் குறிப்பிட்டிருந்தேன்.

சீதனம் என்பது பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட ஒரு சிக்கலான சமூகப் பிரச்சினை. நான் ஒரு அம்சத்தை மட்டும் தொட்டுக்காட்ட முனைந்தேன். அதாவது இது முற்றுமுழுதாக பெண்கள் பிரச்சினை அல்ல, இது ஆண்களையும் பாதிக்கும ஒரு சமூகப் பிரச்சினை என்பதையே நான் சொல்ல முனைந்தேன். சொத்துடமை, சாதியம், வர்க்கம், சமூக அந்தஸ்து, சமூக நகர்வு, சோதிடம் என்ற ரீதியில் பல்வேறு அம்சங்கள் கலந்த இடியப்பச் சிக்கலான பிரச்சினை இது.

எமது சமூக வழக்கில் சம்பிரதாயத்தில் வேரூன்றி வளர்ந்துவிட்ட இந்தப் பிரச்சினை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பதும் எனது கருத்தாகும். சீதனம் என்பது பேச்சுத் திருமணத்துடன் சம்பந்தப்பட்ட விவகாரம் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே பேச்சுத் திருமணங்கள் ஒழிந்தால் தான் சீதனமும் ஒழியும் என நான் நினைக்கிறேன் இதனால்தான் காதல் திருமணங்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்ற யோசனையையும் கூறினேன் காதல் திருமணம் என்ற கருத்து பலருக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

ஏன் ஐயா காதல் என்றதும் இடிகேட்ட பாம்பு போல அதிர்ந்துபோனீர்கள். தமிழனின் வரலாற்றில் திராவிடப் பண்பாட்டில் காதல் உறவுக்கு மகத்துவம் அளிக்கப்படவில்லையா? பண்டைய தமிழ் இலக்கியங்கள் காதலையும், வீரத்தையும் கௌரவிக்கவில்லையா? அன்பால் பிணைந்த ஆண்-பெண் உறவுக்கும், இல்லற வாழ்வின் இன்பத்திற்கும் காதல் ஆதாரமானது அல்லவா?

இளையவன் பயப்படுவது போலபள்ளிப்பருவத்து கிளர்ச்சிகளையும், ''பருவ உணர்ச்சிகளின் சிந்துவிளையாடல்களையும்'' நான் காதல் என்று சித்திரிக்க முனையவில்லை. காதலிப்பதற்கு ஒரு முதிர்ச்சியும், பக்குவமும், பொறுப்புணர்வும் அவசியம் என்பது எனக்குத் தெரியாததல்ல. ஆனால் உணர்ச்சிமயமான ஒரு அன்புறவுக்கு வரைவிலக்கணம் அளிப்பதோ அல்லது வயது வரம்புகளை நிர்ணயிப்பதோ புத்திசாலித்தனமாக எனக்குத் தெரியவில்லை.

உலகடங்கிலும் மனிதப் பிறவிகள் காதலித்துத்தான் திருமணம் செய்துகொள்ளுகிறார்கள். எம்மைப்போன்ற ஒரு சில தேசங்களில் மட்டுமே பேச்சுத் திருமணம்நடைபெறுகின்றது. இந்தப் பேச்சுத் திருமணங்களையும் சீதனம் என்ற பிசாசு தான் நிர்ணயித்துவிடுகிறது. சீதனம் என்பது ஆரிய நாகரிகத்திலிருந்து நாம் பெற்றுக் கொண்ட தொற்று நோய். திராவிட நாகரிகத்தில் சீதன வழக்கு இருக்கவில்லை. பழந் தமிழன் காதலை இல்லற வாழ்வின் தெய்வமாக வழிபட்டான். இன்றைய தமிழன் பணத்தை வழிபடுகிறான். எமது பண்பாட்டுவிழுமியங்களை கைவிட்டதால் வந்தசீரழிவு இது.

ஆணும் பெண்ணும் இணைந்துதான் இன்பகரமான இல்லற வாழ்வைக் கட்டி எழுப்ப வேண்டும். கூட்டு மயற்சியாக பொறுப்புக்களைப் பகிர்ந்து குடும்பம் நடத்த வேண்டும். இதற்கு முதலீடு தேவை என்பது கையாலாகாதவர்களின் நியாயப்பாடு. பறவைகளும், மிருகங்களும் கூட குடும்ப வாழ்க்கை நடத்துகின்றன. காதலித்து வாழ்கின்றன. அவை எல்லாம் முதலீடுதேடி அலையவில்லை.

தாம்பத்திய வாழ்வுக்குப் பொருள் அவசியமென்றால் அதை உழைத்துப் பெற்றுக் கொள்வது தானே. அதைப் பெண்ணிடமிருந்து முதலீடாகப் பெற்றுக் கொள்வது ஆண் வர்க்கத்திற்கே இழுக்கு என்பதை இளையவன் போன்றோர் உணர்ந்து கொள்வார்களா?

## கையடக்கமான கம்பியூட்டர்

இந்த கம்பியூட்டர் சாதாரண காகுலேட்டர் அளவுதான் இருக்கிறது. பேனா அல்லது பென்சிலைக் கொண்டு இதை இயக்கலாம். சிக்காகோ வணிகச் சந்தையில் வியாபாரிகள் இதைக் கையில் வைத்துக் கொண்டு, தங்கள் வியாபாரத்தின் எல்லாத் தகவல்களையும் இதில் குறித்துக்கொள்கிறார்கள். வரவு செலவுகளை சரிபார்த்துக்கொள்கிறார்கள்.

செய்யும் வியாபாரத்திற்குத் தகுந்தபடி வேறு வேறு டிரேடிங் மாடல்கள் இதில் வரப்போகின்றன. மொழி பெயர்ப்புக் கருவியாக, ஸ்பெல்லிங் சரிபார்க்கும் அகராதியாகக் கூட இதைப் பயன்படுத்தலாம். ஆப்பிள் கம்பியூட்டர் கம்பெனியும், ஷார்ப் கம்பெனியும் இந்தக் குட்டிக் கம்பியூட்டரில் Fax வசதியும் செய்யப் போகிறது.

# சீதன தடைச்சட்டம் அவசியம்

**திருமதி மனோன்மணி சண்முகதாஸ்**

தமிழர்கள் மத்தியிலே இன்று 'சீதனம்' என்னும் சொல் மிகவும் முக்கியம் பெற்றுள்ளது. தமிழர் வாழ்கின்ற புலங்களில் எல்லாம் ''சீதனம் வாங்குதல்' அல்லது 'சீதனம் கொடுத்தல்' என்ற நடைமுறையும் வழக்கிலுள்ளது. ஆரபப காலத்தில் 'சீதனம்' என்பது குறித்த பொருளும் நடைமுறையும் மாற்றமடைந்து இன்று அது சமூக நிலையில் பெண்களைப் பெரிதும் இன்னலுக்காளாக்குகின்ற ஒருசமூகமரப கிவிட்டது. பல பெற்றோரும், பெண்களும் இதனால் பெரிதும் மனவேதனையடைந்து, பெண்களாகப் பிறந்ததே பிழை என எண்ணுமளவிற்கும் வந்துள்ளனர். எனவே பெண்களைப் பெரிதும் இடர்ப்படுத்துகின்ற சீதனம்' என்னும் நடைமுறையை முற்றாக நீக்குவதற்கெனச் சட்டமொன்றை ஏற்படுத்துவது நல்லது.

அ. 'சீதனம் வாங்கக் கூடாது' என்ற கோட்பாட்டை முன்னெடுப்பதற்குரிய முக்கிய காரணங்கள்:

## 1. பெண்மை நிலையில்:

'சீதனம் வாங்கக் கூடாது' என ஒரு சட்டத்தை ஏற்படுத்தினால் இன்று பெண்கள் பெரிதும் பயன் பெறுவர். சமூகத்தில் சீதனம்கொடுத்து திருமணம் செய்தல் என்ற நிலை படுகின்றனர். அதனால்தம்முடைய ஆளுமைகளைத் திருமணத்தின் பின்னர் வெளிப்படுத்த முடியாதவர்களாக, உளவியல்நிலையிலே பெரிதும் தாக்கமடைந்தவர்களாக வாழ்கின்றனர். இதனால் ஆண்மை வலுவிழந்து சீதனங்கொண்டு வந்த மனைவியரிடம்அடிமைப்பட்டவராயுள்ளனர் பலர் தமது தலைமைத்துவத்தையேஇழந்துவிட்டநிலையிலுள்ளனர். சிறுவயதிலிருந்தே சீதனம் வாங்கிவளமாக வாழலாமென்ற நினைவுடனேயேயும் பல ஆண்கள் தம் முயற்சிகளைச் சுருக்கிக்கொண்டு சோம்பேறிகளாகியுள்ளனர் கல்வி ஆற்றல் சமமான பெண்களிடம் சீதனம் வாங்கித் திருமணம் செய்து, அந்த மனைவியின் கல்வி ஆற்றலால் மானம் கெடுக்கபபடுகின்றனர். வளமான குடும்பவாழ்வுக்கு அடிப்படையான அன்பு நிலையைக் கைவிட்டுப் பொருள் நிலையில் இல்லறம் பேணுகின்றனர். எனவே ஆண்மை மதிப்பிழப்பதற்கு சட்டம் இடம் கொடுக்காது. தன்திறனை வெளிப்படுத்தும் ஆண்மகன் உருவாக இது வழி வகுக்கும்.

## பெற்றோர் நிலையில்:

குழந்தைப் பேறு பற்றிய வெறுப்பான எண்ணங்கள் பெற்றோர் மனங்களிலே ஏற்படாதிருப்பதற்கும் இச்சட்டம் பெரிதும் உதவி செய்யும். பெண் குழந்தையைப் பெற்று மான நடைமுறை நிலையால் தான் மாற்றமுடியும்.

## 4. சமூகநிலையில்:

சமூகத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும்ஏற்றத்தாழ்வை ஏற்படுத்துவதில் சீதனம் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆண் ஆளப்பிறந்தவன் என்றும், பெண் அடக்கியாளபபடவேண்டியவளென்றும் சமூக நிலையிலே கருத்துக்கள்தோன்றின. இதனால் பெண்விடுதலை பற்றிப் பேசவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. குடும்பம் என்ற பேரவையிலே முக்கியம் வகித்துவந்த பெண், குடும்பத்திற்காக உழைக்க வேண்டிய ஒருஅடியாள் என்ற எண்ணம் உருவாக சீதனம் இடமளித்தது. சமூகத்திலே பெண் தன்னுடைய ஆற்றலை நிறுவுவதற்கு உடலுழைப்பைவிடப் பொருளே போதுமானது என்ற நிலையும் உருவாகியது. 'தாய்மை' என்றநிலைமையிலும் 'பெண்மை' என்ற நிலையிலும் பெண்ணுக்கு சமூகத்தில் இருந்த உயர்ந்தஇடம் 'சீதனம்' என்ற தற்போதைய நடைமுறையால் பெரிதும்தாழ்வுற்றுள்ளது. தொழில்நுட்ப நிலையிலும், கருவிக்கையாடசி நிலையிலும், நுண்மாண் நுழைபுலத்திலும் ஒரு பெண் எவ்வளவுதான் பேராற்றலுடையவளாயிருப்பினும் அவள் 'சீதனம்' கொடுத்தே தன்னுடைய மதிப்பினைப் பெறவேண்டியுள்ளது. ஆணுக்குப்பெண் சமமானவள் எனற

யால் பெண்மையின் மதிப்பீடு குறைவுடுகின்றது. பெண்ணின் ஆற்றல், நிர்வாகத் திறன், தலைமைத்துவம் என்பன கணிக்கப்படாமல் ஆண்களின் ஆற்றல் நிர்வாகத் திறன், தலைமைத்துவம் மட்டுமே சமூகமதிப்பீட்டில் முன்னுரிமை பெறுகின்றது. முற்காலங்களில் பயிர்ச்செய்கை, கைவினைத்தொழில்கள் மக்களால் செய்யப்பட்ட போது தொழிற்றிறமை நிலையில் ஆண்மையும் பெண்மையும் பாகுபாடு பெற்றிருக்கவில்லை. இரண்டும் எதையும் செய்யும்ஆற்றல் படைத்தவை என்றே கருதப்பட்டன. இணைந்து செய்கின்ற கூட்டுறவு நிலையிலே தொழிலியக்கம் நடைபெற்றது. எனவே கூலி நிலையிலும் பாகுபாடு தேவையற்றதாக இருந்தது. 'சீதனம்'என்பதுபெண்ணுக்கே கொடுக்கப்பட்டது. குறிப்பாக ஈழத்திலேபயிர்நிலங்கள், பரம்பரை வீடுகள் பெண்களிடமே தலைமுறை நிலையில் கையளிக்கப்பட்டு வந்தன. இதனால் நில உரிமை நிலையில் ஆண்மை பெண்மையிடம் கட்டுடபட்டிருந்தது. இத்தகைய நிலையை மீண்டும் ஏற்படுத்துவதற்கு 'சீதனம் வாங்கக்கூடாது' என்ற சட்டம் கட்டாயமானது.

இப்போது மேலைத்தேச நாகரிகத்தின் தாக்கத்தால் அரச உத்தியோகத்தில் இருக்கும் ஆண்களை மணப்பதற்காகப் பெண்களே அவர்களுக்கு சீதனம் கொடுப்பதற்கு முன்வருகின்றனர். சிறப்பாக்த் தாய்மார், தமது அரச உத்தியோக மகனுக்கு அது உயர்ந்த கணிப்பீட்டைத் தரும் என்றும் தவறாக எண்ணி சீதனம் வாங்க விரும்புகின்றனர்.

## 2. ஆண்மை நிலையில்:

இன்று சமூகத்தில் பல ஆண்கள் பலிக்கடாகள் போலப் பணம் கொடுத்து வாங்கப் விட்டாலே பெரு வேதனையடையும் பெற்றோர் பலர் உளர் அதிலும் ஒன்றுக்கு மேற்பட்ட பெண் குழந்தைகள் பிறந்துவிட்டால்அவற்றை வெறுக்கவும் முனைகின்றனர். குழந்தையாக இருக்கும் போதே அதனை வெறுப்புணர்வுடன் வளர்க்கின்றனர். பெண் குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்தைத் தடை செய்கின்றனர். மேற்கல்வியின் உயர்வு நிலைக்கேற்பச் சீதனத்தின் தொகையும் பெருகும் என எண்ணுகின்றனர். ஆனால்அவர்கள் அங்கு பெண் குழந்தையின் ஆற்றலைக் கருத்திற் கொள்வதில்லை. பெண் பேராற்றலைப் பொன்னாலும், புடைவையாலும், பொருளாலும் மட்டுப்படுத்திவிடுகின்றனர். பெண்ணின் தலைமுறையே இதனால் பேரழிவிற்குள்ளாவதை அவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை.

இன்றும் இதற்காக குழந்தைப் பேற்றையே பயஉணர்வுடன்தான் எதிர்பார்த்திருக்கும் பெற்றோரும் பலர். ஒரு காலத்தில் பெண் சமூகத்தில் பெருஞ் செல்வமென போற்றப்பட்டாள். மாடு போல மனிதனுக்குப் பல நிலையாலும் பணி செய்வாளென, அவளை 'மாட்டுப்பெண்' என்ற நிலையிலும் சீதனம் மாற்றி விட்டது.

எனவே திருமணம் முடிந்து கணவன் வீட்டிலேயே குடும்ப நிலையில் கூட்டுக் குடும்பமாக வாழவேண்டிய நிலைமை ஏற்பட்டபோது, 'மாட்டுப்பெண்' என்ற பதவியே அவளுக்குக் கொடுக்கப்பட்டது மகனின் மனைவியை 'மாமியார்' அப்படித்தான் நடத்துகின்ற ஒரு மரபான நடைமுறையாகவும் அது இப்போது நிலைபெற்றுவிட்டது. பெற்றோர் என்ற அன்பு நிலையிலல்லாமல்அடக்குநிலை ஆட்சியில் பெண்கள் இன்பங்காணுகின்ற நிலையும் ஏற்பட்டுவிட்டது. இந்நிலையைச் சட்டமூலமாக, இறுக்க ஒரு நிலை ஏற்படாவண்ணம் சீதனம் தடைபோடுகிறது. இதனால் இச்சட்டம் நடைமுறைப் படுத்தபபடாவிடின் பெண்மை முழுவதுமாக இழிநிலை அடையும்.

ஆ. 'சீதனம் வாங்கக்கூடாது' என்ற சட்டத்தைநடைமுறைப் படுத்துவதில் உள்ள இடையூறுகள்.

1. ஆண்களின் மனமாற்றம் நிகழப் பலநூறு வருடங்கள் தேவைப்படும.
2. சமூக மரபுகளை உடைத்தெறியும் புரட்சிப் பெண்களுக்கானபயிற்சி நிறுவனங்கள் இல்லாமை.
3. சீதனம், மண்ணின் உரிமையைப் பெண்களிடமிருந்து பறிப்பதில்முன் நிற்பது.
4. தமிழர் பண்பாடு பேணலில் தமிழரே பின் நிற்பது.
5. பிறபண்பாடுகளால்சீதனம்வாங்குவதைஇன்னமும் தடுக்கமுடியாமலிருப்பது.

இ. இந்த இடையூறுகளை நீக்கும் வழிகள்.

1. பெண்களின் உண்மை நிலையை வீடு, சமூகம், நாடு என்ற நிலையில் நன்குணரவைப்பது.
2. பெண்களே போலியான சமூக மதிப்புக்களைக் கைவிட்டுவிடுவது.
3. பெண்கள் குழுநிலையில் இதற்காகப்போராடுவது.
4. படிப்பறிவினால் சகல பெண்களிடையேயும் நிலைமை விளங்கச் செயற்றிட்டங்களை வகுத்துக் கொண்டு இயங்குவது.
5. பயிற்சி நிலையிலும், அறிவூட்டல் நிலையிலும் குழுமன்றங்கள் அமைத்து கிராம மட்டத்திலிருந்து இந்த எண்ணத்தை அகற்றுவதற்காக இயக்கமாகத் தொழிற்படுவது.
6. சட்டநிலையில் தண்டனைகளையும் வரையறை செய்து நடைமுறைப்படுத்துவது.


உ

முகாவில் – திரியாய்

அருள்மிகு திரியாய் அம்மன் தேவஸ்தான

**வைகாசிப் பொங்கல் விழா**

காலம்: 4-6-1993-ம் திகதி வெள்ளிக்கிழமை பகல் நிகழ்ச்சிகள் யாவும் வழமைபோல் நடைபெறும் இரவு நிகழ்ச்சிகள் யாவும் மட்டுப் படுத்தியே நடைபெறும்.

திரியாய் அம்மன் பரிபாலன சபை

(4928)



**4-ம் ஆண்டு நினைவஞ்சலி**

ஜனனம்:
22-03-53



அழிப்பு:
28-05-89

**செல்லத்துரை கிறிஸ்தோப்பர்** (காணிக்கை)

(28-05-89 அன்று சாவகச்சேரி சந்தையில் தேச விரோதிகளால் அழிக்கப்பட்டவர்.)

சந்திரபுரம், – குடும்பத்தினர்.
ஜோதிரவிவீதி,
மட்டுவில் வடக்கு. (4975)



**1-ம் ஆண்டு நினைவஞ்சலி**

வீரப் பிறப்பு
13 | 01 | 1978



வீரச் சாவு
28 | 05 | 1992

**வீரவேங்கை விவேகன்**
[பாஸ்கரலிங்கம் சிவனேசன்]

தமிழின விடிவிற்காய்
தரணியிலே உதித்த தனயனே
மக்களின் விடிவிற்காய் - தமிழ்
மண்ணில் மலர்ந்த மறவனே!
அந்நியர் உன்னுயிரை அழித்தனர்
ஆனால் உன் இலட்சியத்தை
அழிக்கவே முடியாது.

இவருடன் வீரச்சாவடைந்த மற்றைய வேங்கைகளுக்கும் எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

28-05-93 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலியில் உற்றார், உறவினர், சகபோராளிகளையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

அப்பா, அம்மா, தம்பிமார்,
சித்தி, பெரியப்பா, பெரியம்மா

அளவெட்டி தெற்கு,
அலுக்கை. (4960)

நல்லூர் இன நூலகம்
மாநகர ... 
யாழ்ப்பாணம்

# டி. பி. விஜயதுங்கவின் அரசியல்

**நிலாந்தன்**

டி.யு.என்.எவ் கட்சியின் உத்தியோகபூர்வ தமிழ் பத்திரிகையான கருடன் கடந்த வருட இறுதியில் பின்வரும் சம்பவத்தைபிரசுரித்திருந்தது:

அப்பொழுதிருந்த பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரைச் சந்திக்க சில ராணுவ உயர் அதிகாரிகள் வந்திருந்தார்கள். ''மைக்கலைப் பிடித்து விட்டோம்'' என்று அமைச்சரிடம் கூறப்பட்டது. அமைச்சர்உடனடியாகக் கேட்டார்: ''மைக்கலைப் பிடித்தாயிற்றா? அவனுடைய தொழில் உபகரணங்கள் எங்கே? அவற்றையும் கைப்பற்றி விட்டீர்களா?'' அதிகாரிகள் திகைத்தார்கள். 'இவர் என்ன கேட்கிறார்?' 'இல்லை... நாங்கள் சொன்னது மைக்கல் தளத்தைப் பற்றி... வெலிஓயாவிலிருக்கும் புலிகளின் மைக்கல் தளம்...'' ''ஓ ... அப்படியா...?''

யார் இந்தப் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர்? புலிகளின் மைக்கல் தளத்திற்கும், கசிப்புக்காய்ச்சும் மைக்கலிற்கும் வித்தியாசம் தெரியாதவர்?

சிங்களவர்கள் அவரை அவருடைய பெயரின் முதல் எழுத்துக்களின் அர்த்தத்தைமாற்றி செவிடும் குருடுமான விஜயதுங்க (D.B=Deaf and Blind) என்று அழைத்தார்கள் அவருடைய அப்பாவித்தனங்களிற்காகவும், மந்தத்தனங்களிற்காகவும் முக்கியமாக அவர் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் நம்பிக்கைக்குரியவராக இருந்தார் என்பதற்காகவும் அவர்கள் அவரை அப்படி அழைத்தார்கள்.

ஆனால் இம்மாதம் முதலாம் திகதி நடுப்பகல் வரையிலும் ''செவிடும் குருடுமான'' ஒரு பொம்மை போல காணப்பட்ட விஜயதுங்க, சிங்களவர்கள் சற்றும் எதிர்பார்த்திராத விதத்தில் இம்மாதம் ஏழாம் திகதியிலிருந்து நாட்டின் மிகப்பலமான ஒருமனிதராகிவிட்டார்.

சற்றுப் பதுங்கலான தோற்றம்; பெரும்பாலும் நரைத்த தலை; எப்பொழுதும், நித்திரையிலிருந்து எழுந்தவரைப் போன்ற விழிகள்; ஜனாதிபதி விஜயதுங்க, மது அருந்தாத-புலால் புசியாத-ஒரு வைதிக பௌத்தர். அவருக்கு முன்பிருந்த எல்லா சிங்களத்தலைவர்களையும் போல பௌத்தத்தை வெறுமனே சடங்கார்த்தமாகவும் ஆசாரங்களாகவும் விளங்கி வைத்திருப்பவர்.

அவரை எப்பொழுதும் தேசிய உடையில் தான் காணலாம். மெதுவாக அசைவார் குறைவாகப்பேசுவார் ஏனைய சிங்கள அரசியல்வாதிகளிற்குள்ள பொதுவான நோய் — மைக்மேனியா— இவருக்கில்லை கடந்ந 16 வருடகால யு.என், பி. ஆட்சியில் விஜயதுங்க, விஜேசோமவின் கார்ட்டூன்களில் வரும் கையாலாகாத பொதுமகனைப்போல (Common man) அபிப்பிராயங்களற்ற ஒரு பார்வையாளராகவே காணப்பட்டார்.

எனினும், இத்தகைய அவருடைய நடத்தைகள் சுபாவங்களிலிருந்து தமிழர்கள் அவரைப்பற்றிய பிழையான பிரதிமைகளோடு இருக்கத்தேவையில்லை என்பதை சில அவதானிகள் சுட்டிக்காட்டுகிறார்கள். பிரேமதாஸ அரசு புலிகளுடன் இணக்கமாகக் காணப்பட்ட நாட்களில் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்ட சிரேஷ்ட முஸ்லிம் அமைச்சர் ஒருவர் புலிகளின் பிரதிநிதிகள் சிலரிடம் விஜயதுங்கவைப் பற்றிக் கூறினாராம். விஜயதுங்க ஒரு வெளித்தெரிய வராத இனவாதி என்றும் அவர் எப்பொழுதும் முன் பின் யோசியாமல் வேலை வாய்ப்புக்களைக் கொடுப்பவர் என்றும் இப்படி ஒரு முறை துறைமுகங்களுக்கான வேலை வாய்ப்புக்களை தரும் போது அவர் அவற்றில் நூறு வீதவாய்ப்புக்களையும் சிங்களவர்களிற்கே தந்துவிட்டார் என்றும் மேற்படி சிரேஷ்ட அமைச்சர் கூறியிருக்கிறார்.

இனவாதத்தைப் போலவே எல்லாவற்றிலும் அவர் ஒரு உள்ளொதுங்கிய அரசியல் வாதிதான். தன்னை வெளிப்படுத்தப் பேராசைப் படாத- புகழ் விருப்பங்குறைந்த ஓர் அரசியல்வாதி இத்தகைய தன்முனைப் பற்ற சுபாவம் தான் அவரை கடந்த 16வருடங்களாக இரண்டு ஏதேச்சதிகாரிகளின் கீழும் ஒரு பொம்மை போல வைத்திருந்தது

அவர்ஒரு கொயிகம. ஆனால் உயர் குழாத்தைச் சேர்ந்தவரில்லை. பொதுவாக விமர்சகர்கள் கூறுவது போல பிரேமதாஸ யு.என். பிக்குள் இருந்த உயர் குழாத்தினருடனான தனது நிரந்தர முரண்பாடுகள் காரணமாக விஜயதுங்கவை முன்னணிக்குக் கொண்டு வந்தார். லலித், காமினி போன்ற உயர்குழாம் கொயிகமவினரை ஓரந்தள்ளுவதற்கு சேவை மூப்பை முன்னிறுத்தி விஜயதுங்க என்ற பலவீனமான ஒரு கேடயத்தைபிரேமதாஸ பயன்படுத்தினார். எதிலும் அதன் தீவிர நிலைக்குப் போகாத, எப்பொழுதும் அதிகார பீடத்திற்கு சவாலாக உருவாக முடியாத முடிவுகளை எடுப்பதில் பெரும்பாலும் மற்றவர்களில் தங்கியிருக்கிற விஜயதுங்கவை பிரேமதாஸ சிறிதளவு சேவை மூப்பிற்காகவும் பெருமளவு தன்முனைப் பின்மைக்காகவும் தனது ஆட்சியில் பிரதமராக்கினார். பிரதமர் பதவி தரப்பட்ட போது அதை நம்பமுடியாதவராகக் காணப்பட்ட விஜயதுங்க பின்வருமாறு சொன்னார்; ''இது என்னை முழுக்க முழுக்க வியப்பிலாழ்த்துகிறது.''

யு.என்.பிக்குள் உயர்குழாத்திற்கும் பிரேமதாஸவிற்கும் இடையிலான முரண்பாடுகள் அவரை முன்பு பிரதமராக்கின. இம் முறையும் பிரேமதாஸ கொல்லப்பட்டதோடு எழுச்சி பெற்றுவரும் உயர் குழாத்திற்கும் பிரேமதாஸவின் விசுவாசிகளிற்கும் இடையிலான முரண்பாடுகள் தான் அவரை ஜனாதிபதியாக்கியுள்ளன.

பிரேமதாஸ கொல்லப்பட்டபோது யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு விமர்சகர் சொன்னார்: பிரேமதாஸவின் மரணத்தால் கொழும்பில் உடனடியாகவும் அதிக அளவிலும் மகிழ்ந்திருக்கக் கூடியவர்கள் நிச்சயமாக சிங்கள உயர்குழாத்தினராகத் தான் இருக்க முடியும் என்று. கடந்த நான்கு வருடங்களாக பிரேமதாஸ ஆட்சியில் நசியுண்டு, அதிக பட்ச அசௌகரியங்களை அநுபவித்துவந்த சிங்கள உயர்குழாத்தினர் குறிப்பாக, யு. என். பிக்குள் உள்ள உயர்குழாத்தினர், பிரேமதாஸ கொல்லப்பட்டதாலுண்டான அதிர்ச்சியிலிருந்தும், திகிலிலிருந்தும் அவரது விசுவாசிகள் விடுபட முன்பே, விரைந்து செயற்பட்டிருக்கிறார்கள். உயர்குழாத்தின் அடுத்த தலைமுறைப் பிரதிநிதியான ரணில் விக்கிரமசிங்க பிரதமராக்கப்பட்டிருக்கிறார்.

அதேசமயம் விஜயதுங்க அல்லாத வேறெவரையாவது ஜனாதிபதியாக தெரிவது என்று யு என்.பி. முடிவெடுத்திருந்தால் நிச்சயமாக உயர் குழாத்திற்கும் பிரேமதாஸவின் விசுவாசிகளிற்கும் இடையிலானஇழுபறி யு என்.பியை இரண்டாகப் பிளந்திருக்கும். எனவே இரு அணிகளுக்கும் பொதுவானஅல்லது இரு அணிகளுக்கும் பிரச்சினையில்லாதவர் என்று கருதப்பட்டவரான விஜயதுங்கவை அவர்கள் ஏகமனதாகத் தெரிவு செய்தார்கள்.

ஆனால், ஆட்சிப்பொறுப்பை ஏற்றதிலிருந்து கடந்த சில வாரங்களாக விஜயதுங்க மேற்கொண்டு வரும் மாற்றங்கள் பிரேமதாஸவின் விசுவாசிகளை முதன்மையிழக்கச் செய்திருப்பதோடு யு.என்.பிக்குள் மறுபடியும் எழுச்சிபெற்று வரும் உயர்குழாத்தினருக்கு திருப்தி ஊட்டக் கூடியவைகளாயும் காணப்படுகின்றன. பிரேமதாஸ இல்லாத யு.என். பிக்குள் 'துடக்குக்கழிக்க' முயலும் உயர்குழாத்தின் வழிகளை இலகுவாக்கித் தருபவர் போல விஜயதுங்க காணப்படுகிறார். யு. என். பிக்குள் 'துடக்கு கழிப்பது' என்பது அங்கு பிரேமதாஸவின் ஞாபகங்களை எல்லாவிதங்களிலும் இல்லா தொழிப்பது தான். எல்லாக் குற்றங்களிற்குமான பழியைஇறந்தவர்மீது சுமத்திவிட்டு விஜயதுங்கவும் உயர் குழாமும் பகிரங்கமாகத் தமது கரங்களை விரித்துக் காட்டி, இங்கேரத்தக்கறைகள் இல்லை என்று சொல்லத் தொடங்கி விட்டார்கள்.

சமீபத்தில் பிரேமதாஸவின் அரசியலைப் பற்றி நண்பர்களோடு கதைத்துக் கொண்டிருந்தபோது, சிங்கள அரசியல்வாதிகளின் தேசிய உடை பற்றியும் கதை வந்தது. யார் யார் அரைக் கை ஷேர்ட் அணிபவர்கள்? யார் யார் முழுக்கை ஷேர்ட் அணிபவர்கள்? என்று கேட்கப்பட்டது. அப்பொழுது எங்களுடனிருந்த மூத்த இடதுசாரி ஒருவர் ஷேர்ட்களை வைத்தும் குறித்த அரசியல்வாதியின் பின்னணிபற்றியும்அவருடைய வர்க்க நலன்களைப் பற்றியும் ஓரளவு ஊகித்தறிய முடியும் என்று சொன்னார். கொழும்பிலிருந்து வந்த ஆங்கிலத் தினசரியொன்றைக் கையில் வைத்திருந்த நண்பர் ஒருவர் அதில் காணப்பட்ட சில புகைப்படங்களைச் சுட்டிக் காட்டினார். அங்கு ஜெயவர்த்தன, விஜயதுங்க, ரணில் விக்கிரமசிங்க மூவரும் முழுக்கை ஷேர்ட் அணிந்து காணப்பட்டார்கள். ஆனால் பிரேமதாஸ சில முக்கிய அரச வைபவங்கள் தவிரமற்றெல்லா சந்தர்ப்பங்களிலும் அரைக்கை ஷேர்ட் அணிந்தே காணப்படுவார் என்றும் அவர் ஆமர் வீதியில் கொல்லப்பட்ட போதும் அரைக்கை ஷேர்ட் தான் அணிந்திருந்தார் என்றும் கூறப்பட்டது. அப்பொழுதுஉரையாடலை ஆரம்பித்து வைத்த நண்பர் சொன்னார்: ''அரைக்கை ஷேர்ட்காரரின் அரசியல் முடிந்து விட்டது. இப்பொழுது மறுபடியும் முழுக்கை ஷேர்ட்காரரின் அரசியல் ஆரம்பித்திருக்கிறது''.

---

## யாழ் மாவட்ட....

# கற்பித்தல் வசதிகளும், முறைகளும்

ஞானக்கல்வி "ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து அண்மைக்காலங்களில் புதிதாக நியமனம் பெறும் ஆசிரியர்கள் குறைந்த பட்சம் க.பொ.த [சா/த] வரையிலாவது விஞ்ஞானக்கல்வியைப் பெற்றிருப்பர். எனவே தற்சமயம் ஆரம்ப விஞ்ஞானத்தைக் கற்பிப்பவர்களில் க.பொ.த [சா/த] இலும் குறைவான விஞ்ஞானக் கல்வித் தகைமையைக் கொண்டவர்களின் இடத்திற்கு விஞ்ஞானம் கற்பித்தலுக்கு வேறு ஆசிரியர்களைப் பாரப்படுத்துதல் வேண்டும். தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்கள் ஏற்படுமிடத்துகுறித்த அவ்வாசிரியருக்குத் தீவிரமான விஞ்ஞானக்கல்வி சார் பயிற்சிகள் வழங்குவதற்கான ஒழுங்குகளை யாழ். கல்வித்திணைக்களம் மேற்கொள்ளவேண்டும்.

O சகல ஆசிரியர்க்கும் விஞ்ஞான அலகுகளைக் கூடுதலாகக் கொண்ட செயலமர்வுகளுடன் கூடிய சேவைக்காலப் பயிற்சி குறைந்தபட்சம் தவணைக்கு ஒரு தடவையாவது கிடைப்பதனை உறுதிப் படுத்தவேண்டும். ★

### கற்பித்தல் நேரம்:

ஓர் ஆசிரியர் 4,5ஆம் ஆண்டுகளில் வாரத்திற் கற்பிக்கும் ஒவ்வொரு பாட வேளையும் ஒரு 'கற்பித்தல் நேர அலகு' எனக் கருதப்படுகிறது. பாட நேரங்களில் பாடசாலைக்குப் பாடசாலை வேறுபாடுகொண்டுள்ளமை காணப்பட்டுள்ளது. எனினும் எல்லாப் பாடவேளைகளையும் சமமாகக் கருதியே கணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆண்டு 5இல் விஞ்ஞானம் கற்பிப்பதற்கென ஒதுக்கப்பட்ட 60 பாடவேளை நேரம் போதுமானதாகக் காணப்படுகிறது. ஆனால் ஆண்டு 4ஐப் பொறுத்த வரை தெளிவான நிலைப்பாடு ஆசிரியர் மத்தியில் காணப்படவில்லை. நேரம் போதுமானதென 40 8 சத விகிதத்தினர் கூறும் போது, நேரம் போதாது, மேலதிகம் எனக் கணிசமான பங்கினர் குறிப்பிட்டுள்ளமை, இங்கு தெளிவாகக் குறிப்பிடப்படாத பிறிதொரு காரணியின் செல்வாக்கு இருப்பதாக அனுமானிக்கலாம். பாடப்பரப்பில் வரையறையின்மை, பாடவிடயத்தில் தெளிவின்மை. கற்பித்தல் உத்திகளில் பரிச்சயமின்மை ஆகியன இவ்வாறான நிலைமையைத்தோற்றுவித்திருக்கலாம்.

### விஞ்ஞான எண்ணக்கருக்கள்:

ஆண்டு 4,5 ஆகிய இருவகுப்புக்களுக்கும் கற்பிக்கப்படும் அடிப்படை விஞ்ஞான எண்ணக்கருக்கள் போதுமானவை எனச் சமபங்கினர் குறிப்பிட்டுள்ளனர். இவை 'போதாது' 'மேலதிகம்' எனக்குறிப்பிட்ட முறை ஆண்டுக்கு ஆண்டு பலத்த வேறுபட்டுக் காணப்படுகிறது. மேற் பந்தியில் குறிப்பிட்ட காரணிகள் இங்கும் இவ்வாறான நிலைமையைத் தோற்றுவித்திருக்கலாம். இவ் வகுப்புகளில் கற்பிக்கப்படும் விஞ்ஞான எண்ணக்கருக்களின் பொருத்தப்பாடு பற்றிய ஆசிரியரின் கருத்துக்களைத் தெளிவாக அறியமுடிய வில்லை.

### செயன்முறைக் கற்பித்தல்:

செயன் முறையுடன் தொடர்புடைய பாடவிடய அறிவு, உபகரணங்கள், செயன்முறை ஆகிய மூன்று அம்சங்கள் சார்பாக உதவிகள் தேவை என்பதனைஏறத்தாழ அரைவாசிப் பேர் தெரியப்படுத்தியுள்ளனர். அதாவது இவர்களுக்கு வழங்கப்படும் சேவைக்காலப் பயிற்சி வகுப்புகளின் எண்ணிக்கை குறைவாகவும், அளிக்கப்பட்ட பயிற்சி அனுபவங்கள் போதாமலிருப்பதாகவும் நாம் கருதலாம்.

### பாடப்பரப்பின் கடினத்தன்மை

ஆண்டு 4,5 இல் விஞ்ஞானப் பாடப்பரப்பில் கடினமான பகுதிகள் இருப்பதாக மூன்றிலொரு பகுதியினரிலும் அதிகமானோர் குறிப்பிட்டிருந்தமை முக்கியமான தொரு கருத்தாகும். ஆசிரியருக்கான விஞ்ஞான அறிவு போதாமை, மாணவர்க்கு எத்தகைய கட்டத்தில் விஞ்ஞானக்கல்வியைப் போதிக்கவேண்டும் என்பது பற்றித் தெளிவான விளக்கமின்மை போன்ற காரணிகளே இவ்வாறான நிலைப்பாட்டினை ஏற்படுத்தியிருக்கும் எனலாம். பொருத்தமான பயிற்சி வகுப்புகள் மூலமும் வகுப்புகளுக்கு ஆசிரிய ஆலோசகர்களின்நேரடி விஜயங்கள் மூலமும் இவற்றிற்குப் பரிகாரம் காணலாம்.

### கற்பித்தல் அணுகுமுறைகள்

விஞ்ஞானம் கற்பித்தலின் போது ஆசிரியர்கள் பின்பற்றிய கற்பித்தல் அணுகுமுறைகளில் பாடத்தை விளக்குதல், பரிசோதனை செய்துகாட்டல் ஆகியஆசிரியர் மைய (Teacher Centered) முறைகளே பெரும் பங்கு (66.2 சத வீதம்) வகித்துள்ளமை வருந்தத்தக்க விடயமாகும். இது ஆரம்ப விஞ்ஞானக் கல்வி சார்பாக ஓர் ஆரோக்கியமான நிலையல்ல.

### மாணவர் பிரச்சினைகள்:

மாணவர் சார்பான பிரச்சினைகளாக இனம் காணப்பட்டவற்றுள் பிரதானமானவை வருமாறு: மொழியாற்றல் தாழ்வாக இருந்தமை, மாணவர் வரவு ஒழுங்காக இல்லாமை, செயன்முறைத் தேர்வில் மட்டும் மாணவர் அக்கறை காட்டுதல், மாணவரின் மொழியாற்றல் ஒரு பெரும் பிரச்சினையாக இருப்பதாக 27.5 சதவீத ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

### ஆசிரியர் சார்பான பிரச்சினைகள்:

பாடவிடய அறிவும், கற்பித்தல் முறைகள் பற்றிய அறிவும், தங்களிடம் போதுமானளவு இல்லாமையும். நூல்கள், ஆசிரியர் வழிகாட்டிகள் என்பன தம் கைக்கு எட்டுவதில்லை எனவும் ஆசிரியர் சார்பான பிரச்சினைகளாக முன்வைத்துள்ளனர். பாரிய வேறுபாடுகளை உடைய மாணவர் தொகுதியும் ஒரு பிரச்சனையாகும்.

( 8ஆம்பக்கம் பார்க்க)

## யாழ் மாவட்ட மதிப்பீடு சார்பான கருத்துக்கள்:

நேரம் பற்றாக்குறை, செய்முறை சார்பான வசதிகள் பற்றாக்குறை என்பனவும், மாணவர்கள் மொழித்திறன், ஒழுங்கீனமான வரவு என்பனவும், மதிப்பீட்டின் நோக்கம், வழிமுறைகள் ஆகியன பற்றித் தெளிவான விளக்கம் ஆசிரியரிடம் இல்லாமை என்பதுவும் மதிப்பீடு தொடர்பாகத் தாம் எதிர்நோக்கிய பிரச்சினைகளாக ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். நடைமுறையிலுள்ள எழுத்துச் சோதனை முறைக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தைக் குறைத்து, செயன்முறைகள் சோதனைகளுக்கும் வாய்மொழிச் சோதனைகளுக்கும் முதன்மை வழங்கவேண்டும் என்பதும் இங்கு ஆசிரியர் முன்வைக்கும் பிரதான கருத்தாகும்.

## ஆலோசனைகள்:

ஆண்டு 4 இல் விஞ்ஞான பாடத்துக்கு நேரம் போதாது என்னும் கருத்து ஏற்படுவதற்குப் பிரதானமான காரணம் யாதெனின் விஞ்ஞானத்தை விசேடத்துவம் நிறைந்த, தனிப்பாடமாகக் கருதுவதேயாகும். எனவே விஞ்ஞானம் கற்பித்தல் பற்றிய தெளிவான விளக்கம், குறிப்பாக, என்னென்ன விடயங்களைப் பிள்ளைகள் கற்றால் போதும் என்பது பற்றிய விளக்கம், ஆசிரியரிடம் ஏற்படுத்திவிட்டால் இப்பிரச்சினை எழாது எனவே, பின்வரும் ஆலோசனைகள் முன்வைக்கபபடுகின்றன.

ஃ 30 பாடசாலைகளுக்கு ஒருவர் என்ற வகையில் ஆரம்ப விஞ்ஞானக் கல்விக்கென 15 ஆசிரிய ஆலோசகர்கள் யாழ் மாவட்டதநுக்கென நியமிக்கப்பட வேண்டும்.

ஃ ஒவ்வொரு ஆசிரிய ஆலோசகரும் சராசரியாக வாரத்தில்3 நாட்கள், மூன்று பாடசாலைகள் எனனும் விகிதத்தில் விஜயத்தினை மேற்கொண்டு ஆரம்ப விஞ்ஞான கல்வி சார்பான பணிகளை மேற்கொள்ள வசதி செய்யப்பட வேண்டும்.

ஃ குறித்த பாடசாலைகளில் (ஏறததாழ 30) ஆரம்ப விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவருக்கும் மாதத்தில் ஒரு நாள் (பாடசாலை நடைபெறாத நாளில்) ஆரம்ப விஞ்ஞானம் சார்பான கருத்தரங்கு / செயலமர்வினை ஒவ்வொரு ஆசிரிய ஆலோசகரும் ஒழுங்கு செய்து நடாத்த வேண்டும்.

ஃ குறைந்தது கோட்ட மட்டத்திலாவது, ஒவ்வொரு கோட்டததிலும் விஞ்ஞான வள நிலையம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இது கோட்டத்தின் புவியியற் காரணிகள் மற்றும் மாணவர் பரம்பல் சார்பாக அதிகரிக்கப்பட வேண்டும்.

ஃ மாணவரின் மொழியறிவை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் வலியுறுத்தப்பட வேண்டும் மொழி கற்பிக்கப்படும் பாடவேளையில்மட்டுமோ அல்லது மொழி கற்பிக்கும் ஆசிரியர் மட்டுமோ மேற்கொள்ளப்பட வேண்டிய பணியல்ல இது என்பதனை அனைவர்க்கும உணர்த்த வேண்டும்.

ஃ ஆரம்ப விஞ்ஞான பாடத்திற்குரிய ஆய் கருவிகளையும், பொருளகளையும் தொகுத்துப் பாதுகாத்துப் பயனபடுதத வகுப்பறையில் ஒரு பகுதி (Scince Corner) ஒதுக்கப்பட வேண்டும்.


இவ்வாறான நிலைமையில், இந்த ஆய்வின் மூலமாக வெளிககொண்டு வரப்பட்ட விடயங்கள குறித்துப் பலதரப்பினரும் அககறை கொள்ள வேண்டியது அவசியமாகும். இதில, யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களததுக்குப் பெரும் பங்குண்டு விரைவாக பல நடவடிககைகளைத் துணிச்சலுடனமேற்கொள்ள வேண்டும. கோட்ட மட்டத்தில, ஆரம்ப விஞ்ஞானக் கல்விக்கெனத் தனியாக ஒரு கல்வி அதிகாரியை நியமித்தும், போதுமான எண்ணிக்கையில் ஆரம்ப விஞ்ஞான ஆசிரியஆலோசகர்களை நியமித்தும் இந்த ஆய்வறிக்கையில் காணப்பட்டுள்ள ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவதில் யாழ். பிரதேசக் கல்விப்பணிப்பாளர் ஆர்வம் காட்ட வேண்டும்.

-இவ்வாறு ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சுருக்கி வழங்கியவர்:

மதன்


## 1-ம் ஆண்டு நினைவலைகள்



**வீரவேங்கை உதயன் / உதயகுமார்**

[அன்ரன் மரியதாஸ் பாலகிருஸ்ணன்]

தாய்க்கு: 29-8-1978 தாயகத்திற்கு: 28-5-1992

இப்பாரினில் பாலகனாக பிறந்த உன்னை பாலூட்டும் போது நீயும் பாயும்
வேங்கையாவாய் என நாம் நினைக்கவில்லை அன்று
பள்ளிப் பருவத்தில் பாடசாலை சென்ற நீ பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு
பாதகர்களை அழிக்க புறப்படுவாய் என நினைக்கவில்லை கண்ணா! - இன்று
அந்நியரின் ஆக்கிரமிப்புக்குள் சிக்குண்டு இருக்கும் எம் மாநிலத்தை
மீட்டு எடுக்கும் முன்பே நீ மாவீரனாவாய் என நாம் நினைக்கவில்லை கண்ணா! - நாளை
உனது லட்சியத்தை நிறைவேற்ற உன் பாதையில் நாங்கள் தொடர்வோம்

4-ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

தாங்கா துயரில்
அம்மா, அப்பா,
அண்ணன்மார், அக்காமார்,
பெரியம்மாமார், பெரியப்பா,
மாமாமார், மாமிமார், மற்றும்
உறவினர், நண்பர்கள்.

[4983]

## 1-ம் ஆண்டு நினைவலைகள்

வீரப் பிறப்பு 26-09-1974



வீரச் சாவு 28-05-1992

வீரவேங்கை

**வீரச்செல்வன் / வதனன்**

(பாலசிங்கம் ஜோசெப் / எடிசன்)

இனவெறிக்கோடை இடிநெஞ்சில் வீழுந்தது
பாடித்திரிந்த சுதந்திரப் பறவையின்
விடியல் கீதத்தை இடையில் முடித்தது
பாடித்திரிந்த சுதந்திரப் பறவை - எடிசனின்
விடியல கீதத்தை இடையில் முடித்தது
உன்சிரிப்பும் போகவில்லை புன்சிரிப்பு மாறவில்லை
உறவுக்காய் பூத்த உந்தன் பேச்சுத்தான் போகவில்லை
பேசாமல் நீயுறங்கும் கோலத்தை பார்க்கும்
உள்ளம் எமககில்லை
ஆண்டொன்று சென்றாலும்
எங்கள் கண்ணீர்ப் பூக்களை காணிக்கை ஆக்குகின்றோம்.

– குடும்பத்தினர்.

கரந்தன்,
நீர்வேலி.

(4976)

## அழைப்பு

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்

**பொ. ச. குமாரசாமி**

(முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)

அவர்களை நினைவு கூருமுகமாக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர்சங்கம் நடாத்தும்

நினைவுப் பேருரை

''சென்ற காலத்து பழுதிலாத் திறன்''

நிகழ்த்துபவர் - திரு. க. சி. குலரத்தினம்

காலம்: 30 05.1993 ஞாயிறு பிற்பகல் 3.30 மணி

இடம்: குமாரசுவாமி மண்டபம்

குறிப்பு:– அமரர் பொ ச. குமாரசாமியின் குடும்பத்தவரையும், உறவினர்களையும் இதில் கலந்து சிறப்பிக்கும்படி விசேடமாக அழைக்கின்றோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம்.

பாலசுப்பிரமணியம் தவபாலன் செயலர்.

(சி-6691)

யாழ். மாவட்ட சி. க. கூ. ச சமாசம்

## பதவி வெற்றிடம்

பதவி: வெளிக்கள உத்தியோகத்தர்

கல்வித் தகைமை: க.பொ.த (உ த)பரீட்சைசித்தி

சம்பள அளவு: 730–20 10_25 5=1055.00 ரூபா. 1160/-படியுடன் பிரயாணப்படிரூபா.500 வழங்கப்படும்.

வயது: 18 தொடக்கம் 40 வரை.

விண்ணப்ப முடிவு திகதி: 15-06-93

கோப்பாய் பிராந்தியத்திலுள்ள அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கமுடியும். விண்ணப்பப் படிவங்களைச் சமாசக் காரியாலயத்தில் பெற்றுஅங்கத்துவ சங்கங்களினூடாக விண்ணப்பிக்கவும்.

182¼ ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

பதில் மாவட்டச் செயலாளர் யாழ் மாவட்ட சி.க.கூ.ச.சமாசம்

(சி6690)

## கால்நடை வளர்ப்பாளர்களே

உங்கள் கால்நடைகளுக்குத் தேவையான தீனிகளை மலிவாகவும், தரம் குன்றாமலும் பெற்றுக் கொள்ள, நீங்கள் நாடவேண்டிய ஒரே ஒரு இடம்

**"மருதம்"**

கால்நடைத் தீவன அங்காடி, சங்கானை.

குறிப்பு:- சுழிபுரத்தில் இயங்கி வந்த மேற்படி அங்காடி 12-05-93 தொடக்கம் பிரதான வீதி சங்கானைக்கு (சந்தைக்கு முன்பாக) இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்**

(சி-6695)




(சி-6687)

# இந்திய-இஸ்ரேல் நட்புறவு; இரு பூதங்களின் கூட்டு

இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் ஷிமொன் பெரஸ் இம் மாத மத்தியில் இந்தியாவிற்கு மேற்கொண்ட விஜயமானது இந்திய-இஸ்ரேல் உறவில் ஒரு மைல்கல்லாகும். ஷிமொன் பெரஸ் தற்பொழுது வெளிவிவகார அமைச்சராக இருப்பினும், இஸ்ரேலிய அரசியலில் சக்தி வாய்ந்த ஒரு மனிதர். தொழிற் கட்சியின் தலைவரான இவர் முன்னாள் பிரதமரும் கூட. இப்படிப்பட்டவரின் இவ் விஜயத்தை ஒரு பிரதமரின் விஜயம் என்றே கூறலாம்.

கெடுபிடிப் போர் முடிந்து உலகம் புதுஉறவுகளை தேடிய போது, இந்தியாவும் தன்னை வெகுவாக மாற்றிக் கொண்டது. இந்தியா தனது பழைய நண்பர்களிடம் இருந்து விடுபட்டு புதிய நண்பர்களைத் தேடிக் கொண்டது. இந்த வரிசையில், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் தனது 40 வருடகொள்கையைமாற்றி இஸ்ரேலை இராஜதந்திர ரீதியில் அங்கீகரித்து உறவை ஏற்படுத்திக் கொண்டது.

ஆனால், இஸ்ரேல் - இந்திய உறவானது தனியாக இரு ஆசிய நாடுகளின் உறவு என்பதனைவிட புதிய அரசியல் ஒழுங்கில், இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு அமெரிக்கா போட்ட ஒரு முடிச்சு - இணைப்பு- என்று கூறுவதே பொருத்தப்பாடானதாகும்.

இந்திய - இஸ்ரேல் உறவானது இரு நாட்டு அரசாங்கங்களினாலும், வெகுசன தொடர்பு சாதனங்களினாலும் வெகுவாக வரவேற்கப்பட்டதொன்றாகும் இஸ்ரேலுடனான இந்தியாவின் இராஜீகஉறவு பற்றி எழுதிய இந்தியாருடே, 'வெகு நாளாகக் காலம் கடத்தி, தற்பொழுது வரலாற்றுச் சிறப்பான முறையில்'' அமைந்ததென்றும், இது ஓர் 'இன்பகரமான அதிர்ச்சி' எனவும் வர்ணித்திருந்தது. இவ் உறவு முறைபற்றி எழுதிய இஸ்ரேலியப் பத்திரிகையான ஜெருசலேம் போஸ்ட் ''உலகத்தோடு சேர்ந்து கொள்கிறது இந்தியா'' என ஆசிரிய தலையங்கம் தீட்டியது.

இந் நிலையில் வெளிவிவகார அமைச்சர் பெரஸின் இந்திய விஜயமானது. மிகவும் முக்கியம் வாய்ந்தது என்பதில் சந்தேகப்படஏதுமில்லை. இவ் விஜயத்தின் போது, பொருளாதார ஒத்துழைப்பு, பரஸ்பர முதலீடு, வெளிநாட்டு உறவில் கலந்தாலோசனை ஆகியவற்றிற்கான தஸ்தாவேஸ்துக்களிலும், சிவில் விமானப் போக்குவரத்து உல்லாசப் பயணம், தொழில் நுட்ப ஒத்துழைப்பு கலாசாரப் பரிமாற்றம் ஆகிய ஒப்பந்தங்களில் பெரஸ் கைச்சாத்திட்டார்.

2

பெரஸின் இவ் விஜயத்தின் போது பாதுகாப்பு உடன்பாடுகளோ அன்றி இராணுவதளபாட விற்பனை உடன்பாடுகளோ ஏற்படவில்லை. இதே வேளை பாதுகாப்பு ஒத்துழைப்பு பற்றிய உடன்பா கள் ஏற்படுத்துவதற்கு இந்தியாவும், இஸ்ரேலும் பரஸ்பரம் நம்பிக்கை வளர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் இஸ்ரேல் தரப்பில் கூறப்பட்டது.

ஆனால் வெளிப்படையான இராணுவ ஒத்துழைப்பு போர் தளபாட விற்பனை என்பது இங்கு முக்கியமானதல்ல. இந்திய - இஸ்ரேல் உறவு மோசமாக இருந்த எண்பதுகளிலேயே இந்தியா இஸ்ரேலை அணு ஆயுத தொழில் நுட்பத்திற்கு நாடியதும், இஸ்ரேல் அதை வழங்கத் தயாராக இருந்தது என்பதும் ராஜீவ் காந்தியின், பாதுகாப்பிற்கு இஸ்ரேலின் உளவுதுறை ஆலோசனை பெறப்பட்டதாகவும் தகவல்கள் முன்னரே வெளியாகியிருந்தன. ஆகையினால், இங்கு முக்கியமானது இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கும், தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு எதிராகவும் இந்தியாவுடன் ஒத்துழைக்க இஸ்ரேஸ் தயாராக இருப்பது என்பதே ஆகும்.

இதனை இந்திய- இஸ்ரேல் இராஜதந்திர உறவுகள் கடந்த வருடம் ஏற்படுத்தப்பட்ட போதே இஸ்ரேல் வெளிக்காட்டி இருந்தது. இஸ்ரேல் அமைச்சர்களில் வலதுசாரிக் கூட்டின் முக்கிய உறுப்பினரான பெஞ்சமின் நேதான் யாஹு ''இந்தபிரச்சினையை (இஸ்லாமிய அடிப்படை வாதத்துடன் கூடிய 'பயங்கரவாதம்') முதலில் உணர்ந்தவர்கள் நாங்கள். கட்டுப்பாடற்ற மத அடிப்படை வாதம் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கிறது. துரதிர்ஷ்டவசமாக இதைப்பற்றி நாங்கள் நன்கு அறிவோம். பயங்கரவாதத்தை களத்தில், அரசியல், சட்ட ரீதியில், சர்வதேச அளவில் சந்திப்பது எப்படி என்ற விஷயத்தில் நாங்கள் தேர்ச்சி கண்டிருக்கின்றோம். அதை இந்தியாவுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைவோம்'' எனக் கூறியிருந்தார்.

இந் நிலையில் பாதுகாப்பு உடன்பாடுகள் வெளிப்படையாக எழுதா விடினும், பல எழுதப்படாத உடன்பாடுகள் இஸ்ரேல் - இந்திய உறவில் முக்கியமான பகுதிகளாகும். இது அரசுகளினதும், உளவு ஏஜெண்டுகளினதும் இரகசிய உறவாகும். இவ் உறவுகளை இஸ்ரேலின் வார்த்தையிலும், இந்தியாவின் பரிபாசையிலும் கூறுவதானால், ''ஜனநாயக அரசுகளைப் பாதுகாப்பதற்கான இஸ்லாமிய மத அடிப்படை வாதம் உருவாக்கும் பயங்கர வாதத்திற்கெதிரான போராட்டமாகும்.''

3

இஸ்ரேலின் பார்வையில் உலகில் ஐரோப்பாவில் இருந்து ஜப்பான்வரை பரவிக்கிடக்கும் கொடுங்கோன்மைச் சமுத்திரத்தில் இரண்டே இரண்டு ஜனநாயக நாடுகள் தனித்து நிற்கின்றன. ஒருபுறம் சிறிய இஸ்ரேல், மறுபுறம் பெரும்சனத்தொகைகொண்ட பெரிய இந்தியா. இவ்விரு நாடுகளுக்கும் பிரதானமான அச்சுறுத்தல் இஸ்லாமிய அடிப்படை வாதமும், அவற்றால் உருவாக்கப்படும் 'பயங்கரவாதமும்' ஆகும்.

இந்தியாவின் பார்வையிலும், அரபு நாடுகளினால் கடந்த காலத்தில் பெரும் நன்மை ஏதும் ஏற்பட்டு விடவில்லை என்பதே ஆகும். மாறாக தொல்லைகளே மிஞ்சின. இந்தியா ருடேயின் கூற்றுப்படி ''உலகில் தலை எடுத்த இடிஅமீன்களையும், சதாம் உசைன்களையும் கடாபிகளையும் சொந்தம் கொண்டாடிய இந்தியா இஸ்ரேலை மட்டும் தீண்டத்தகாத தேசமாக 40 வருடங்கள் ஒதுக்கி வைத்திருந்தது. நன்மை ஏதாவது விளைந்ததென்றால் அது பேருக்குத்தான். அரபுநாடுகள் பாகிஸ்தான் பக்கமே சார்ந்தன. பாகிஸ்தான் அணுஆயுதம் தயாரிக்க கடாபி நிதி உதவி கூட ஏற்பாடு செய்தார். இந்தியாவிற்கு வர்த்தக ரீதியில்விசேட சாதகம் எதுவும் செய்து கொடுக்காத அரபுநாடுகள் மறைமுகமாகப் பிரிவினை வாதத்தை ஆதரித்து வந்தன என்பதாகும். இந்நிலையில் இஸ்ரேலுடன் உறவை வளர்த்துக் கொள்ளுதல் இந்தியாவிற்கு லாபகரமானதொன்றாகவே பட்டது.

4

இவற்றோடு இந்திய-இஸ்ரேல் உறவானது அணுஆயுதம் தொடர்பாகவும் எழுதப்படாத ஒரு புரிந்துணர்வின் அடிப்படையில் இணங்கிப் போகும்வழியும் ஏற்படவாய்ப்புண்டு இன்றைய நிலையில் இஸ்ரேலிடம் அணுவாயுதங்கள் பல உள்ளதாக உலகம் கருதுகின்றது. இந்தியாவிடம் அணுவாயுதம் உண்டா? இல்லையா? என்பது குறித்து சந்தேகங்கள் இருப்பினும், இந்தியா அணு ஆயுதத்தை குறுகிய நேரத்தில் தயாரிக்கும் ஆற்றலைப் பெற்றிருப்பதாக உலகம் கருதுகின்றது.

மேலும் இஸ்ரேல் 'இஸ்லாமிய அணுக்குண்டு' குறித்து எப்பொழுதுமே தீவிர அக்கறை கொண்டுள்ளது. அது ஒருமுறை ஈராக்அணுகுண்டை தயாரித்துவிடும் என்ற அச்சத்தில் ஈராக்கிய அணு உலைகளையே குண்டுவீசி அழித்தது. அதே போன்றும் தற்பொழுது பாகிஸ்தானிடம் அணுக்குண்டு இருப்பதாக ஊர்ஜிதப்படுத்தப் பட்டுள்ள நிலையில் இஸ்ரேலின் கவனம் பாகிஸ்தானின்பக்கம் திரும்பியுள்ளது.

இந் நிலையில் இந்திய- இஸ்ரேல் ஆகிய இரு நாடுகளுக்கும் பாகிஸ்தானின் அணுக்குண்டுமீது குறி உள்ளது இதற்கு இந்திய-இஸ்ரேல் புலனாய்வுத்துறைகள் ஒன்றிணைந்து தகவல் பரிமாற்றம் செய்து கொள்ளலாம். இதன் மூலம் தம்மீது அணு ஆயுத அச்சுறுத்தலை இல்லாது ஒழித்துவிட இவ்விரு நாடுகளும் முற்படக்கூடும்.

ஆனால் இவ்விரு நாடுகளும் அணுவாயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தயாராக இல்லை. இவ் இரு நாடுகளுமே இஸ்லாமியஅணுக்குண்டால், தமக்கு ஏற்படப் போகும் அச்சுறுத்தலை சுட்டிக் காட்டுபவையாகும். இதன் காரணமாக அணுவாயுதப் பரவல் ஒப்பந்தத்தில் தாம் கைச்சாத்திடப்போவதில்லை எனவும் வாதித்தும் வருகின்றன. இந்நிலையில் அணுஆயுதம்தொடர்பாக இந்தியாவும் இஸ்ரேலும் ஒரு பொது உடன்பாட்டின் அடிப்படையில் தொழிற்படுவதற்கான வாய்ப்புக்களும் அதிகமாகும்.

ஆனால், இவை எழுதப்படாத ஒப்பந்தங்களாக திரை மறைவு உடன்பாடுகளாக இருப்பினும் இவை வெளிப்படையான ஒப்பந்தங்களை விட விரைவாகவே செயற்படுகின்றன. இதனை பம்பாயில் நிகழ்ந்த குண்டு வெடிப்பு தொடர்பான புலனாய்வுக்கு இஸ்ரேலிய மொசாட் விரைந்து உதவிக்கு அழைக்கப்பட்டதில் இருந்தே புரிந்து கொள்ளலாம்.

5

அதாவது இந்திய - இஸ்ரேலிய உறவில் முக்கியமாக பகுதி வெளிப்படையான ஒப்பந்தங்கள் என்பதை விட, இஸ்ரேலிய புலனாய்வுத் துறையான மொசாட்டிற்கும் இந்தியாவின் றோ போன்ற புலனாய்வுத் துறைகளுக்கும் இடையிலான உறவு ஆகும். பயங்கரவாதத்திற்கும், இஸ்லாமியவாதத்திற்கும்எதிரான ஒருங்கிணைந்த செயற்பாடு என்ற ரீதியில் வெளிக்காட்டப்படும் இவ் உறவானது அடிப்படையில் இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு எதிரான அமெரிக்காவின் ஆசியுடன் கூடிய ஓர் உடன்பாடு என்றே கூறலாம்.

இஸ்ரேலும், இந்தியாவும் தம்மைத் தாமே ஜனநாயக நாடுகள் எனக் கூறிக் கொண்டாலும் இவை இரண்டும் இன்று தேசிய இனங்களின் எழுச்சிக்கு எதிரான அரச பயங்கர வாதத்தை கட்டவிழ்த்து விட்டுள்ள நாடாகும். இஸ்ரேல் ஒரு சிறிய நாடு. இருப்பினும் பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்துள்ளது. பலஸ்தீனத்திற்கு எதிராக அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இந்தியாவோ பரந்த பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட நாடு. இதனால் பல தேசிய இனங்களின் தேசிய எழுச்சிக்கு எதிராக அடக்கு முறையைக் கையாள்கின்றது. இதில் காஷ்மீரில் இடம்பெறும் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை இஸ்லாமிய அடிப்படைவாதம்உருவாக்கிய பயங்கரவாதம் என்கிறது.

இந்த வகையில் இரு நாடுகளுமே இஸ்லாமியஅடிப்படைவாதத்திற்கு எதிராக போராட்டம் என்ற ரீதியில் தேசிய இனப் போராட்டங்களை நசுக்குகின்றன.

ஒருவகையில், இஸ்ரேல்-இந்திய உறவானது சர்வதேசரீதியாக இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு எதிராக அமெரிக்கா உருவாக்கி வரும் அரண் என்றே கொள்ளலாம். ஏனெனில் கெடுபிடிப் போரின் பின் உலகில் தனது மேலாதிக்கத்திற்கு இஸ்லாமிய அடிப்படைவாதமே அச்சுறுத்தலாக அமையலாம் என அமெரிக்கா கருதுகின்றது. இந்நிலையில், இஸ்லாமிய உலகம் அணுக்குண்டையும்பெற்றுவிட்ட நிலையில் இதற்கு எதிராக ஒரு பலமான அணியை அமைப்பதில் அமெரிக்கா தீவிர கவனம் செலுத்துகின்றது.

கெடுபிடி யுத்தகாலம்வரை, இஸ்லாமிய உலகம் வல்லரசுகளின் பக்கம் இரண்டாகப் பிளவுற்றிருந்தமையால், அவற்றை கையாள இஸ்ரேல் மட்டுமே போதும் எனக்கருதிய அமெரிக்கா கெடுபிடியுத்த முடிவில்-இஸ்லாமிய நாடுகளுக்கு இடையில்வல்லரசுசார்பு அணிகள் அற்ற நிலையில் இஸ்ரேல் மட்டும் போதுமானதாக கருதவில்லை. இந்நிலையிலேயே இஸ்ரேல் - இந்திய உறவானது அமெரிக்காவைப் பொறுத்து பெரிதும் விரும்பப்பட்டதொன்றாகவுள்ளது.

இதேவேளை இஸ்லாமிய அடிப்படைவாத வன்முறைக்கு எதிரான நடவடிக்கை என்ற ரீதியில் உருவாகும் இந்திய - இஸ்ரேல் உறவானது தேசிய இனங்களின் எழுச்சியை நசுக்க முற்படும் இரு பெரும் பூதங்களின் கூட்டாகும். இவ்விரு பூதங்களின் கூட்டும் அவர்கள் கூறுவதுபோல் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதோ அன்றி 'பயங்கரவாதத்திற்கு' எதிரான போராட்டமோ அல்ல: தேசிய இனங்களின் போராட்டத்தை நசுக்குவதும், இஸ்லாமிய நாடுகளில் மேற்கொள்ளும் அழிவு வேலைகளின் மூலம் இஸ்லாமிய உலகம் அணி சேருவதையோ, அன்றி பலம் பெறுவதையோ தடுத்து நிறுத்துவதும்திட்டமாகும் இதே வேளை, இவ் இரு பூதங்களின் சேர்க்கை இஸ்லாமிய உலகிற்கு வெளியில், குறிப்பாக இலங்கையிலும் அவற்றின் தாக்கங்கள் வெளிப்படலாம்.

**ஜெயராஜ்**

## கிளிநொச்சி மாவட்ட ஆசிரியருக்கான அறிவித்தல்

இவ்வருடத் தொடக்கத்திலிருந்து இன்றுவரை கடமைக்குச் செல்லாது நீண்டகாலமாக அங்கீகாரமற்ற லீவில் நிற்கும் கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர்களுக்கு உதவும் பொருட்டு கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளதால் கடமைக்குச் செல்லாத ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறும்,

கலந்துரையாடலில் பங்கு கொள்ள வரும் ஆசிரியர்கள் தாம் சேவைக்குச் செல்லாத காரணத்தைக்கூறித் தம்மைத் தொடர்ந்து சேவை செய்ய அனுமதி கோரும் மனுவைத் தயாரித்தக் கொண்டு வருதல் வேண்டும் எனவும்,

இக்கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களப் பணிமனையில் நடைபெறும் எனவும்,

கடமைக்குச் செல்லாத ஆசிரியர்களைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு செயலாளர் கல்வி அமைச்சு தம்மை அறிவுறுத்தியுள்ளது எனவும் கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## ஒலிபெருக்கி

என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு எழுத்து மூலமான அனுமதியைப் பெற்றால் மாத்திரமே ஒலிபெருக்கியை பாவிக்க முடியும். இந்த சட்டதிட்டங்களை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இந்த நடைமுறை அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் எனவும் காவல்துறைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## கண்டெடுப்பு

(மானிப்பாய்)

ஒரு தொகைப் பணம் வீதியில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## யாழ். இந்து மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்.

# - பொன்விழா -

(கால்கோள் விழா)

இடம்: கல்லூரி மண்டபம்
காலம்: 29-05-1993 சனிக்கிழமை
நேரம்: காலை 8-00 - பி. ப. 2-30 ம. வரை

பிரதம விருந்தினர்:
திரு. இரா. சுந்தரலிங்கம்
(கல்விப் பணிப்பாளர், வட மாநிலம்)

நிகழ்ச்சி நிரல்

★ ஆசியுரைகள், வாழ்த்துரைகள், சிறப்பு விருந்தினர் உரைகள்

★ கலை நிகழ்ச்சிகள்
அ. வில்லிசை
ஆ. தனிநடனம்
இ. பாட்டு (குழு)
ஈ. குழுநடனம் I
உ. பல்லியம்
ஊ குழுநடனம் II
எ. நாட்டிய நாடகம்
ஏ. நாடகம்

பெற்றோர், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி தி. நாகராசா, தலைவர்
நா. செல்வரத்தினம், செயலாளர்

பொன்விழாச்சபை
யா. இ. ம. க. (சி-6697)



## யாழ். இந்து மகளிர் கல்லூரி பல்லாண்டு வாழியவே!

ஐம்பதாம் ஆண்டு நிறைவு விழாவை
கொண்டாடிக் கொண்டிருக்கும்
யாழ். இந்து மகளிர் கல்லூரி
நன் மாணாக்கரை உருவாக்கி
தேசம் சிறப்புற சேவையாற்றி
பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

பரியோவான் முதலுதவிப் படையினர்
யாழ். இந்து மகளிர் கல்லூரி
(4971)



## ஸ்ரீதர் திரையரங்கில்

முல்லை மாவட்டக் கலைஞர்களின்

# "இது எங்கள் தேசம்"

தினசரி மாலை 4 மணி, 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30, மாலை 4 மணி, 6 மணி
[சி-6688]


## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 27-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9581

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-0089, 24-7941, 41-2659, 27-8959, 28-6624, 28-2049 28-9186, 26-5782, 26-8810, 27-2761, 26-5202, 22-9005, 27-5186, 26-9992, 24-4272.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-6452, 28-1414, 42-1059, 24-4992, 26-7546, 26-1495, 41-4129, 28-9676, 24-5734, 24-6533, 42-1464, 27-6887, 24-6431, 26-5846, 42-0849, 26-0032, 43-3576, 41-9111, 24-9337.

# 55 குழிகளில் கண்ணிவெடி வீரப்பன் புதைத்தாரம்

(சென்னை)

வீரப்பன் குழுவின் நடவடிக்கை குறித்து மேட்டூர் பகுதி மாடுமேய்ப்பவர் ஒருவர் கொடுத்த தகவலைத் தொடர்ந்து 350 அடி நீள மின்சார கம்பியை தொடர்ந்து சென்ற பொலிசார் 55 குழிகளில் கண்ணிவெடிகள் புதைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாக தமிழக பொலிஸ் உயர் அதிகாரி வோல்டர் தேவாரம் தெரிவித்தார்.

மேலும் 147 குழிகள் கண்டுபிடிக்கப்பட்டு 1350 கி. நிறை கொண்ட வெடி மருந்துகள் கைப்பற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். இத்தேடுதலில் தமிழக பொலிஸ் அதிரடிப்படை அதிகாரி மற்றும் ஏராளமான பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.

# தமிழக ஆளுநர் பதவிதுறப்பு புலிகள் விவகாரம் காரணம்

(சென்னை)

தமிழ்நாடு ஆளுநர் பீஷ்ம நாராயணசிங்கின் பதவி துறப்பிற்கு விடுதலைப்புலிகள் விவகாரமும் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது.

அ. இ. அ. தி. மு. கவிற்கும் காங்கிரஸ்கட்சிக்கும் இடையே விடுதலைப் புலிகள் விவகாரம் தொடர்பாக அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டிருக்கும் சூழலில் தாம் தொடர்ந்தும் பதவி வகிக்க முடியாதிருப்பதாக முன்னாள் ஆளுநர் பீஷ்ம நாராயண சிங் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை மாமண்டூர் அருகே மூன்று தடா கைதிகளை சிறை மீட்டுச் சென்ற சம்பவத்தின் போது கைதிகளுக்கு பாதுகாப்பிற்காக சென்ற ஆறு பொலிசார் கடமை தவறிய குற்றத்திற்காக வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டனர்

சம்பவம் நடைபெற்றதும் உடனடியாக பதவி நீக்கம் செய்யப்பட்ட இந்த அறுவரும் இரகசிய விசாரணைக்குட்படுத்தப்பட்டபோது கடமை தவறிய குற்றம் நிரூபிக்கப்பட்டதால் வேலையிலிருந்து அடியோடு நீக்கப்பட்டுவிட்டனர்.

## பதிவு செய்யவும்

பொது எழுது வினைஞர் சேவையில் அதி சிறப்பு வகுப்புக்கு (மூப்பு அடிப்படையில்) பதவி உயர்வு செய்வதற்கான போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பித்த யாழ். மாவட்டத்திலுள்ளபரீட்சார்த்திகள் அனைவரும் உடனடியாக செயலகத்தின் பரிபாலனக் கிளையில் தங்கள் பெயரையும், தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும் பதிவுசெய்து கொள்ளுமாறு அரச அதிபர் கேட்டுக் கொள்கிறார். இவ் விபரங்கள் அவர்கள் கொழும்பு சென்று பரீட்சை எழுதுவதற்கு கப்பல் மூலம் பிரயாண ஒழுங்கு செய்வதற்காகும்.

## கூட்டம்

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இலவச உலர் உணவு முத்திரை விநியோகம் தொடர்பான கூட்டம் இன்று காலை 10-00 மணியளவில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

தயவுசெய்து சகல கோப்பாய் பிரிவு கிராம சேவை அலுவலர்களையும் தவறாது கூட்டத்திற்கு சமுகமளிக்கும்படி பிரதிமாவட்ட ஆணையாளர் கேட்டுள்ளார்.

# டிப்ளோமா பரீட்சை பின்போடப்பட்டது

[கொழும்பு]

பயிலுநர்ஆசிரியர்களுக்கான தொலைக்கல்வி பரீட்சைகள் இன்றும் நாளையும் நடைபெறும். வடக்குகிழக்கு உட்பட நாடு முழுவதும் நடக்கும் இப் பரீட்சையில் 28ஆயிரம் பேர் தோற்றுகின்றனர். இதே சமயம் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பரீட்சை அடுத்த மாதம் 12ஆம், 13ஆம் திகதிகளுக்குப் பின்போடப்பட்டுள்ளது.

# வீரப்பனைப் பிடிக்க 1000 பரா இராணுவம்

(டில்லி)

வீரப்பன் குழுவைப் பிடிப்பதற்கு ஆயிரம் பரா இராணுவத் துருப்புக்கள் கர்நாடகாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்புப் படையினருடன் சேர்ந்து புதிதாக அனுப்பப்பட்ட துருப்புகள் வீரப்பன் குழுவை காட்டில் தேடிப் பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் என பரா இராணுவப் பிரிவுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இத் துருப்புக்கள் இதுவரை இந்தியாவில் நடைபெறாத மிகப் பெரிய 'மனிதவேட்டை' யில் ஈடுபடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வடமாநிலமான உத்தரப் பிரதேசத்திலிருந்து பரா துருப்புக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## ஐ. தே. க.

கூறினார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், தென் மாகாணசபை ஆளும் கட்சிக்கு எதிர்க்கட்சி மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் ஆதரவு தர முன்வந்துள்ளதாக அரச தரப்பில் சொல்லப்படுவது ஆதாரமற்றது என்றார்.

அதேவேளை மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர்கள் சிறிமாவோ பண்டாரநாயக்கா வீட்டில் கூடி அடுத்த நடவடிக்கை பற்றி ஆலோசனையில் கலந்ததாகவும் தெரியவருகிறது.

## மேல் மாகாண

ஏ. எச். எம். பௌசி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சராகவும், ரட்ண சிறிவிக்ரம நாயக்கா விவசாயம், மாகாண நிர்வாகம், கூட்டுறவு அமைச்சராகவும் பிரேமரட்ன குணசேகர சுகாதாரம், கடற்தொழில் அமைச்சராகவும் பதவி ஏற்றனர்.

## கொழும்பு

நெருக்கடி நீங்க மேலும் காலம் எடுக்கும் எனவும் கூறப்படுகின்றது.

இதே வேளை கொழும்பு வரும் கப்பல்களை காலி துறைமுகத்திற்கு இடமாற்றுவது தொடர்பாகவும் ஆராயப்படுவதாக அமைச்சர் அலுக் அலுவிகார கூறியுள்ளார்.

## கிளாலி

யில்; இந்தப் பகுதியில் படையினர் புலிகளால் தாக்கப்படுகின்றனர், காயப்படுத்தப்படுகின்றனர் என்றும், இப்பகுதி பொதுமக்களின் பயணத்திற்கு தடைசெய்யப்பட்டபகுதி என்றும், பொதுமக்களைப் பணயமாக வைத்துக்கொண்டு புலிகள் நடமாடுவதாகவும் குறிப்பிட்டார்.

இப்பகுதியில் பொதுமக்கள் உயிரிழந்திருந்தால் அது சட்டவிரோதமான பாதையில் அவர்கள் காணப்பட்டுள்ளார்கள் என்றே அர்த்தமாகும் எனவும் நளின் அங்கம்மன தெரிவித்துள்ளார்.

## துப்பாக்கிச் சூடு

(குருநகர்)

மண்டைதீவு சிறிலங்கா இராணுவக் காவலரண்களில் இருந்து நேற்றுக் காலை 8.15 மணியளவில் யாழ்.கரையோரப் பகுதிகளை நோக்கி துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

விட்டு விட்டும் தொடர்ச்சியாகவும் துப்பாக்கி வேட்டுகள் கேட்டுக்கொண்டிருந்தன. (21)

# வாதுவ நாளை வரும்

(யாழ்ப்பாணம்)

வாதுவ கப்பல் நாளை வருமென யாழ். செயலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கப்பல் நாளை மறுதினம் வருமென முன்னர் அறிவிக்கப்பட்ட போதிலும் இது ஒரு நாள் முன்னதாக நாளை வரவிருக்கின்றது. இக்கப்பலில் ஒரு தொகுதி மா எடுத்துவரப்படுவது தெரிந்ததே. [சி]


## மரண அறிவித்தல்

# திரு. சண்முகம் விக்கிரமசிங்கம்

(வளர்மதி ஸ்ரோர்ஸ், காங்கேசன்துறை)

காங்கேசன்துறை காட்டடைப்பு வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கொக்குவிலில் வசித்து வந்தவருமாகிய திரு. சண்முகம் விக்கிரமசிங்கம் 27-05-1993இல் காலமாகி விட்டார் இவர் புஸ்பராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சண்முகம், திருமதி சண்முகம் அன்னரத்தினம் ஆகியோரின் அன்பு மகனும், தம்பையா, கனகம்மா ஆகியோரின் மருமகனும், சதீஷ் (கனடா), வளர்மதி, (அரசலா), சதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. சபாநாயகம் (புருணை) காலஞ்சென்ற Dr புஸ்பராணி, தவராசசிங்கம் (கனடா), ஜெயபாலசிங்கம் (ஜெர்மனி), வசந்தராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், இளங்கோ, லோகநாயகி, காலஞ்சென்ற கனகேந்திரராசா, செல்வநாயகி (மட்டக்களப்பு), சிவயோகநாதன் (கனடா), தேவராசா (கனடா), பாலயோகினி (டென்மார்க்), சாந்தினி (அவுஸ்திரேலியா), உருத்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (29-5-1993) சனிக்கிழமை பகல் 12-00 மணிக்கு கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்பு கோம்பயன் மணல் மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு.

தகவல்: மனைவி

(4985)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மங்கந்தரா வீதி, 81-ம இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ஆம் ஆண்டு மே மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.